# தமிழரசு

1.4.1996 ரூ.3




இனிவரும் காலம்
கணிப்பொறியே !
கட்டுரை உள்ளே...

# இந்த இதழில்...


★ 1996 பொதுத் தேர்தல்:
அனைத்து மாவட்ட ஆட்சித்
தலைவர்கள் கூட்டம் ........................... 2

★ வயதிலே அறிவிலே பெரியார் ............ 4

★ பெரியார் மாவட்டத்தில்
வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள் ...... 11

★ 3000 ஆண்டுகட்கு முற்பட்ட
பாறை ஓவியங்கள் கண்டுபிடிப்பு ....... 15

★ ப(ா)ட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.. 17

★ எளிமை (கவிதை) ................................ 24

★ கண்தானம் செய்திடுவீர்! (கவிதை)..... 27

★ செய்திகள் - செய்திகள் - செய்திகள் ..... 33




★ நூல்நயம்................................. ....... 47




**இதழ்தோறும் ஓர் இனிய குறள்:**

*அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்*
*புறத்த புகழும் இல (39).*

★ அறநெறியில் வாழ்வதன் பயனாக வருவதே இன்பமாகும். அறத்தோடு பொருந்தாமல் வருவன எல்லாம் இன்பம் இல்லாதவை; புகழும் இல்லாதவை.

---


# தமிழரசு


திருவள்ளுவராண்டு - 2027

பங்குனித் திங்கள் : 19

மலர்: 26 இதழ்: 19

1.4.1996


விலை: ரூபாய் 3





# 1996 பொதுத் தேர்தல்: அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம்

**1996** பொதுத்தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசுத் தலைமைச் செயலாளர் திரு என் அரிபாஸ்கர், இ.ஆ.ப., முதன்மைத் தேர்தல் அதிகாரி திரு கே. சந்திரசூடன், இ.ஆ.ப., அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், தமிழக உயர் அலுவலர்கள், மற்றும் காவல்துறை அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர். **(25.3.96)**





> ஆயிரம் ஆண்டுகள் ஆனபின்னாலும்
> அன்னைத் தமிழகத்தின் நலங்காக்க
> ஒளி வீசும் பகுத்தறிவுப் பகலவன்
> தந்தை பெரியார்!



# வயதிலே அறிவிலே பெரியார்! வாய்மைப் போருக்கு என்றும் இளையார்!

திரு எஸ்.ஜி. இராமானுஜன், 'விடுதலை' ஏட்டில் 1940-ஆம் ஆண்டு தொடங்கி 1960-ஆம் ஆண்டு வரையில் செய்தியாளராக 20 ஆண்டுக்காலம் சீரிய முறையில் பணியாற்றியவர். அதன்பின் ஈரோடு குடியரசு அலுவலகத்தில், தந்தை பெரியார் அவர்களின் மறைவுக் காலம் வரையிலும் பணி செய்தவர் ஆவார். தஞ்சை மாவட்டத்தில், செம்பொன்னார் கோயில் என்னும் ஊரில் பிறந்து தந்தை பெரியார் அவர்களின் அறிவாற்றலால் ஈர்க்கப்பட்டு, ஈரோட்டுப் பாசறையில் தன்னை இணைத்துக் கொண்ட திரு இராமானுஜன், ஒரு நிருபராக தந்தை பெரியார் அவர்களிடம் தான் கண்ட சிறப்புகளை மலரும் நினைவுகளாக இங்கே வழங்குகிறார்.

தந்தை பெரியார் அவர்கள் சராசரி மனிதன் என்கிற எல்லையைத் தாண்டியவர். சமுதாய நலனுக்காகத் தன் வாழ்வையே அர்ப்பணித்தவர் ஆவார்.

தந்தை பெரியாரின் அறிவாற்றல் வியப்பைத் தருவது; அது கடலை விட ஆழமானது! அவரது செயல்திறனோ விந்தையானது; அது வானத்தைவிடப் பரந்தது! அவரது மனித நேயமோ இதயத்தைத் தொடுவது; அது இமயத்தை விட உயர்ந்தது!

ஐயா அவர்கள் ஒரு தலைவராக இருப்பதற்கு என்னென்ன இலக்கணங்கள் உண்டோ அத்தனையும் நிறைவாகப் பெற்றவர் என்பது மட்டுமல்ல, ஒரு தனி மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர் குண நலன்களையும் ஒருங்கே பெற்றுத் திகழ்ந்தார்.

ஐயா அவர்கள் பெற்றிருந்த தனிமனித குணநலன்களை, நிகழ்ச்சிகளின் வெளிப்பாடாக அவரது சிறப்பினை வெளிக்காட்டிய அன்றாடச் சம்பவங்களாக அருகிருந்து காணுகின்ற பேற்றை 'விடுதலை' ஏட்டின் நிருபர் என்கிற வகையில் பெற்றிருந்தேன். அதனை தமிழரசு இதழுக்கெனப் பகிர்ந்து கொள்வது என்னுடைய கடமை ஆகும்.

## பண்பு

பொய் சொல்லாமல் நேர்மையாக இருப்பதே பண்பு என்று நினைப்பவர் ஐயா அவர்கள். அதில் தவறினால் அருகில் சேர்க்க மாட்டார். ஒருமுறை ஐயா அவர்களின் பிரச்சாரத்திற்கு ஒரு அமைப்பினர் எல்லா வசதிகளோடு ஒரு வேன் கொடுத்தார்கள். ஆனால் அதை எங்கே யாரிடமிருந்து பெற்றது என்பதை அவர்கள் ஐயாவிடம் கூறவில்லை. ஐயா கேட்டபோதும் அவர்கள் அதனைக் கூற வில்லை. ஆனால் ஒரு சில நாட்கள் கழித்து 'குமுதம்' ஏடு அதைப் பற்றி எழுதியது. 'தந்தை பெரியார் பயன்படுத்துகிற வேன் அருள்நெறி திருப்பணி மன்றத்தால் பயன்படுத்தப்பட்ட வேன்' என்று எழுதிவிட்டது. அது தெரிந்ததும் ஐயா அவர்கள் அந்த வேனைக் கடைசி வரையில் பயன்படுத்தவில்லை.

## மரியாதை

பிறரிடத்து மரியாதை செலுத்துவதற்குப் பெரியவர்

சிறியவர் என்று பிரித்துப் பார்க்கும் அளவுகோல் அவரிடம் கிடையாது. சின்னப் பையனாக இருந்தாலும் கும்பிட்டு வரவேற்பார். அருகில் அமர வைத்துக் கொள்வார். 'வா போ' என்று ஒருமையில் பேச மாட்டார். வாங்க போங்க என்று மரியாதையுடன் அழைத்துப் பேசுவார். மின்விளக்கு ஸ்விட்ச் போட வேண்டும் என்றால், தானே எழுந்து போய்ப் போடு வாரே தவிர, அடுத்தவரை ஏவ மாட்டார்.

## அன்பு

தன்னுடன் இருப்பவர் ஏதும் தவறு செய்துவிட்டால், தண்டிப்பு அவருக்குத்தானே ஒழிய அவரது குடும்பத்தினரை அல்லல்படாது காக்கின்ற மனித நேயம் ஐயாவுக்கே உரித்தான தனிக்குணம்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த ஒருவர், அவரது பெயரைச் சொல்வது நாகரிகமில்லை என்பதால் விட்டுவிடுகிறேன். இயக்கத்தில் மிகவும் பற்றுக் கொண்டு செயல்பட்டவர். கெட்டிக்காரர், ஆனால் கொஞ்சம் முரடு. கலப்புமணம் செய்து கொண்டவர். இயக்கத்தின் சார்பில் ஒட்டல் மறியல் செய்தபோது தீவிரமாக மறியலில் ஈடுபட்டவர். அவரது தீவிரமான பற்றைக் கண்ட தந்தை பெரியார் அவர்கள், அதே நோக்கில் அன்புடன் அவரை வரவேற்று அழைத்து வந்தார். ஆனால், அவரை ஒருமுறை ரூ.2,000 கொடுத்து காய்கறி வாங்கி வர அனுப்பியபோது, பணத்துடன் போனவர் திரும்ப வரவில்லை. சில நாட்கள் கழித்து, அவரது மனைவி ஐயாவிடம் வந்து தன் கணவரைப் பற்றிக் கேட்டார். அதற்கு ஐயா 'அவர் இங்கே இல்லையே' என்று மனம் வெறுத்துப் பதில் உரைத்தார்கள். ஆனால், அந்த அம்மாவை அப்படியே அனாதரவாக விட்டுவிடாமல், கொஞ்ச நாள் சமையல் பணிக்கு வைத்திருந்து, பின்னர், திருச்சி புத்தூர் பள்ளியில் பணிக்குச் சேர்த்துவிட்டார்.




## ஆற்றல்

மனித மனங்களை அளந்து பார்க்கின்ற அற்புத ஆற்றலைப் பெற்றவர் தந்தை பெரியார் அவர்கள். விஞ்ஞானி ஜி.டி. நாயுடுவுக்கே அந்த அடிப்படையை ஒரு முறை உணர்த்திக் காட்டினார் ஐயா அவர்கள்.

தொழில் அதிபர் பிர்லா பற்றி 'தீப ஜோதி பர்மன்' என்பவர் ஆங்கிலத்தில் பிர்லா மாளிகை மர்மம் என்றொரு நூல் எழுதியிருந்தார். இந்த நூலைப் படித்த ஜி.டி. நாயுடு அவர்கள். அதைத் தமிழ்ப்படுத்தி நூலாக வெளியிட வேண்டும் என்று விரும்பி தந்தை பெரியாரிடம் வந்தார். பேப்பர், அச்சு, பைண்டிங் அனைத்து செலவுகளையும் நான் ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறி ஜி.டி. நாயுடு அவர்கள், "மொத்தம் 50,000 பிரதிகள் போட்டு அதில் 20,000 தனக்குக் கொடுத்துவிட்டு, மீதி இருப்பதை மக்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும்" என்றும் தெரிவித்தார்.

'என்ன, செய்யலாமா?' என்று ஐயா கேட்டார். அதற்கு நான் செய்யலாம் என்று சொன்னேன். சாமி சிதம்பரனாரும், பி.வி. ரங்கசாமி ஆகியோரும் செய்வோம் என்று கூறினார்கள். சர்க்கார் தடை செய்யக்கூடும் என்று எதிர் நோக்கி, சுப்பையா என்பவர் பெயரால் அந்த நூல் வெளியிடப்பட்டது.

நூலை வெளியிட்டாலும் ஐயா அவர்கள் அதை இலவசமாக வழங்கவில்லை. கும்பகோணத்தில் ஒரு கூட்டத்திற்குப் போன ஐயா, அங்கே தானே புத்தக விற்பனையை ஆரம்பித்து வைத்தார். ஒரு புத்தகம் 2 அணா. அங்கேயே, ஒரே கூட்டத்திலேயே 5,000 புத்தகங்கள் விற்றுவிட்டன. ஆனால், இப்படி விலைக்கு விற்பது ஜி.டி. நாயுடு அவர்களுக்குத் தெரிந்துவிட்டது. ஓட்டல் கன்னிமாராவில் வந்து தங்கிய ஜி.டி. நாயுடு, அங்கிருந்து ஐயாவுக்கு போன் செய்து, 'உங்களைப் பார்க்க வருகிறேன்' என்று சொன்னார். அதற்குத் தந்தை பெரியார், 'நீங்க அங்கேயே இருங்க, நான்



**எஸ்.ஜி. இராமானுஜன்,**

வருகிறேன்' என்று சொல்லி விட்டு, புறப்படத் தயாராகும் வேலையில் ஜி.டி. நாயுடுவே வந்துவிட்டார். வந்ததும் தந்தை பெரியாரிடம், 'நமக்குள் செய்து கொண்ட ஒப்பந்தம் என்ன? நீங்கள் செய்வது என்ன?' என்று கேட்டார். அதற்கு ஐயா அவர்கள் ஜி.டி. நாயுடுவைப் பார்த்து, "ஒரு மனிதனுக்கு இருப்பது இரண்டு கைகள். இனாமாக புத்தகம் கொடுத்தால் கைக்கு இரண்டாக நான்கு புத்தகங்கள் கேட்கிறார்கள். ஆனால் விலைக்கு என்றால், காசு கொடுத்துத்தான் வாங்க வேண்டும் என்றால் ஒரு புத்த கம்தான் வாங்குவார்கள். ஆனால் அதை ஒழுங்காகப் படிப்பார்கள். உங்களுக்கு எது வேண்டும்" என்று கேட்டார். இதைக் கேட்டதும் பதில் எதுவுமே பேசவில்லை ஜி.டி. நாயுடு. வியப்பின் விளிம்புக்குச் சென்றுவிட்டதால் அவரால் பேச முடியவில்லை.

## கணக்கு

ஒரு முறை பி.டி. இராஜன், ஜி.டி. நாயுடு இருவரும் ஐயாவைப் பார்க்க வந்தனர். பல விஷயங்களைப் பேசிய பின், பேச்சு ஐயாவின் டிரைவர் பக்கம் திரும்பியது. ஆறுமுகம் என்பவர் ஐயாவுக்கு வண்டி ஓட்டிக் கொண்டிருந்தார். ஜி.டி. நாயுடு, 'உங்கள் டிரைவருக்கு எவ்வளவு சம்பளம் தருகிறீர்கள்?' என்று கேட்டார். அதற்கு ஐயா அவர்கள் ரூ.630 தருகிறேன் என்று பதில் சொன்னார். ஜி.டி. நாயுடு பஸ் கம்பெனி வைத் திருந்தார். அவரே டிரைவருக்கு அந்த அளவு சம்பளம் தருவ தில்லை. எனவே திகைத்துப் போன ஜி.டி. நாயுடு எப்படித் தருகிறீர்கள் என்று கேட்டார். அதற்கு ஐயா சொன்னார் "நம்ம டிரைவருக்கு அப்பா அம்மா கிடையாது. ஒரே ஒரு அக்கா ஈரோட்டில் இருக்கிறார். அவருக்கு ரூ.25. இவர் (டிரைவர்) பீடி குடிப்பதற்காக ரூ.5 கொடுத்து வருகிறேன். மற்றபடி காலையில் டிபன் சாப்பிடுவது ரூ.5. மதியம் சாப்பாடு ரூ.10. இரவு சாப்பிடுவது ரூ.5. என்று தினமும் கணக்கிட்டு, மேலே சொன்னதையும் சேர்த்துப் பாருங்கள். ரூ.630 வந்து விடும் என்று சொன்னார். ஐயாவின் கணக்கிடும் திறனைக் கண்டு ஜி.டி. நாயுடு, பி.டி. ராஜன் இருவரும் வியப்பில் ஆழ்ந்து விட்டார்கள்.

## தெளிவு

சாதாரணமாக புரிந்து கொள்ள முடியாத ஒன்றைக் கூட ஐயாவிடம் சென்று கேட்டால், கேட்பவர் திருப்தி படுகிற அளவுக்கு விளக்கம் அளிப்பார். அதைக் கேட்கும் போது அறிந்ததைப் பற்றித் தெளிவும், மேலும் அறிய வேண்டும் என்ற ஆவலும் பிறக்கும்.


சென்னை இராபின்சன் பூங்காவிலிருந்து ஊர்வலம் ஒன்று புறப்பட்டு வருகின்றது. என்ன ஊர்வலம் என்று நினைவில்லை; இந்தி எதிர்ப்பு ஊர்வலம் என்றே எண்ணு கின்றேன். ஊர்வலத்திற்குத் தலைமை வகித்து முத்தையா செட்டியார் நடந்து வருகின்றார். அந்த நிகழ்ச்சிக்கு ரிப் போர்ட்டிங் நான்தான். ஆர்வத் துடன் எழுதிக் கொடுத்ததில், தந்தை பெரியாரைப் பற்றி, 'பௌமன்' போலவே காட்சி அளிக்கிறார் என்று எழுதி யிருந்தேன். 'சிறப்பானவர், மேலானவர்...' என்ற பொருளில் எங்கோ எப்பொழுதோ படித்த



நினைவில், நேரடியான பொருள் தெரியாமலேயே அந்தச் சொல்லைப் பயன்படுத்தியிருந்தேன். தந்தை பெரியார் அந்தச் செய்தித் தொகுப்பைப் படித்துவிட்டு, நன்றாக இருந்தது என்று பாராட்டினார். நான் அவரிடம், பௌமன் என்று சொல்லைப் புரியாமலேயே கையாண்ட உண்மையை ஒப்புக் கொண்டு, அவரிடம் அதுபற்றிய விளக்கம் கேட்டேன். சற்றும் கோபமடையாமல் அந்தச் சொல்லுக்கு 'ஏகச் சக்கரவர்த்தி' என்று பொருள் சொல்லி எனது மனம் நிறைவடைய வைத்தார் தந்தை பெரியார்.

## சிக்கனம்

ஐயா வெளியிட்ட குடியரசு இதழ் பச்சை அட்டையைத் தாங்கி வந்தது. இப்படிப் பச்சை அட்டையை ஐயா தேர்ந்தெடுக்கக் காரணம் என்ன என்று யோசித்து யோசித்து, கடைசியாக ஒரு காரணத்தைக் கண்டுபிடித்தேன்! ரஷ்யாவில் லெனின் நடத்திய பத்திரிகையின் நிறம் பச்சை! லெனின் வெளியிட்ட முதல் அறிக்கை பச்சைத் தாளில்! காந்தியடிகளின் முதல் அறிக்கை பச்சை அறிக்கை! என்றெல்லாம் பலவாறாக யோசித்து அதையெல்லாம் பின்பற்றித்தானே பச்சை அட்டையைப் பயன்படுத்துகிறீர்கள் என்று ஐயாவிடம் கேட்டேன். அதற்கு அவர் "நாசமாப் போச்சு" என்று தலையில் அடித்துக்கொண்டு சிரித்தார். காரணம். அப்போதெல்லாம் சென்னையில் பெருமாள் செட்டிதான் பேப்பர் வாங்கித் தருபவர். பி.ஆர்.



**ஒழுக்கம் என்பது நம் இதயங்களின் தூய்மையில் தான் வேரூன்றியிருக்கிறது.**

**—காந்தியடிகள்**

அண்டு சன்ஸிலும் எல்லாப் பொருட்களும் விற்பார்கள். ஒருமுறை தந்தை பெரியார் அங்கு சென்றிருந்தபோது, ஒரு ஓரமாக பெரிய பேப்பர் கட்டு வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து விசாரித்திருக்கிறார். ஏன் விலை போகாமல் வைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்டதற்கு, பேப்பர் கட்டுகளை ஏற்றி இறக்கும்போது எப்படியோ ஒரு ஓட்டை விழுந்துவிட்டது. அதனால் யாருமே வாங்கவில்லை என்று கூறியிருக்கிறார்கள். தந்தை பெரியார், "அதை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்க, "எடை போட்டு விற்கப் போகிறோம்' என்று பதில் சொன்னதும் உடனே அவ்வளவையும் எடை போட்டு வாங்கி வந்துவிட்டார். பிறகு ஓட்டை இருக்கும் இடத்தை மடித்து பத்திரிக்கை அட்டை அடிக்க பயன்படுத்திக் கொண்டார்.

தந்தை பெரியார் அவர்களே இந்தப் பச்சை அட்டைப் பின்னணியைப் பற்றிக் கூறிய பிறகுதான் ஐயாவின் சிக்கனத்தைப் பற்றி சிந்திக்காமல் போய்விட்டோம் என்பதே எனக்குப் புரிந்தது.

## பொறுமை

பொறுமை என்னும் குண நலனைப் பற்றிப் பேசினால், தந்தை பெரியாரை விடப் பொறுமைசாலி எவருமில்லை என்று துணிந்து கூறலாம்.

அன்னை நாகம்மையார் அவர்கள் இருந்தபொழுது ஒரு நாள் வாணியம்பாடிக்குச் சென்று பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு வந்தார். அந்தக் கூட்டத்தில், சில பாவிகள்... நாவினால் சொல்லக்கூட கூசுகின்ற,..............தை எடுத்து வீசி இருக்கிறார்கள். பொதுக் கூட்டத்தில் பேசிவிட்டு நேரடியாக ஈரோடு வந்துவிட்டார். நாகம்மையார் அவர்கள் முகம் சுளித்தபடியே கோட்டைக் கழற்ற, "நான் நல்லாப் பேசினேனா? ஒருத்தனுக்கு ரொம்ப ஆனந்தம். அதனால கீழே கிடந்த எதையோ எடுத்து வீசிட்டான்" என்று கூறி சிரித்தாராம். அந்த அளவுக்குப் பொறுமைசாலி தந்தை பெரியார்.

## ஆத்திரம்

பொறுமையானவர் என்றாலும், ஆத்திரம் என்றால் அவ்வளவு ஆத்திரம் வரும். ஆனால் அத்தனை ஆத்திரமும் சமுதாயத்திற்குத் தீங்கு செய்யும் கொடுமைகளுக்கு எதிராகத்தான். பொதுக்கூட்டங்களில் அவர் பேசும்போது அந்த ஆத்திரம் ஆவேசம் கொள்ளுவதைக் காணலாம். ஆங்காரத்

துடன் தனது பூட்ஸ் காலால் உதைத்து உதைத்துப் பேசுவார். மேடையே ஆட்டம் காணும் வகையில் பேசுவார். கூட்டம் முடிந்ததும் சாதாரணமாக ஆகிவிடுவார். அவருக்குக்குடல் இறக்க நோய் ஏற்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம் என்றே நான் எண்ணுகிறேன்.

**ஆசை**

உண்ணுகிற உணவில் தந்தை பெரியாரின் தனிப்பட்ட ஆசை என்றால், எள் உருண்டையை மிகவும் பிரியமுடன் சாப் பிடுவார். மூன்று வேளையும் அவருக்கு மாமிசம் இருக்க வேண்டும். கறி உணவு கட்டாயம் வேண்டும் அவருக்கு.

**மகிழ்ச்சி**

தந்தை பெரியார் நான் அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைந்த நேரம் அறிஞர் அண்ணா ஆட்சியில் அமர்ந்து சுயமரியாதைத் திருமணம் சட்டமாக்கப்பட்ட நேரம், தமிழ்நாடு என்று பெயர் மாற்றப் பட்ட நேரம். இவை இரண்டும் தான் அவருக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியை அளித்தது.

**வேகம்**

வேகம் என்றால் சிந்தனை யிலும் செயலிலும் அவருக்கு வேகம் வேகம்தான். மாயவரம் வந்தால் அவர் செட்டித் தெருவில் நடராசன் என்பவர் வீட்டில் தங்குவார். காலையில் எழுந்து வாக்கிங் போகும்போது நாங்களும் அவருடன் போவோம். அவர் நடப்பார், அவருக்கு இணையாக செல்ல வேண்டும் என்று நாங்கள் ஓடுவோம்.

இதே வேகத்தை இயக்கம் நடத்துவதில் மட்டுமல்ல, மக்கள் இதயங்களை இயக்குவதிலும் அவர் காட்டினார். அறிவின் சிகரமாக அவர் இருந்தபோதும், மற்றவரின் அறிவுத் திறனை வயது வித்தியாசமின்றி ஏற்று மதித்தார். சமுதாயக் கேடு களைக் கண்டு பொங்கினார். என் மக்களுக்குத் தீங்கிழைப்பதா என்று கொதித்து எழுந்தார். அவர் இட்ட விதை தான் இன்று ஆல விருட்சமாய் வளர்ந்து தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் காத்து வருகின்றது. அன்னைத் தமிழகம் இருக்கும் வரை அந்த பகுத்தறிவுப் பகலவனின் ஒளி இந்த மண்ணில் வீசிக் கொண்டே இருக்கும்.

**சந்திப்பு:**
**எஸ்ஸார். ஸாரதி**

# பெரியார் மாவட்டத்தில் இன்றுள்ள சில பழக்கவழக்கங்கள்


பெரியார் மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் இன்றும் சில பழக்க வழக்கங்கள் கொங்கு வேளாளர் பிரிவினரில் காணப் படுகின்றன. குறிப்பாக இப் பிரிவைச் சார்ந்த பெண்மணி களுக்கு மூக்குத்தி அணியும் வழக்கம் அறவே இல்லை என்பது நம்மை ஆச்சரியப்பட வைத்தது. இவர்கள் கல் முகப்பு வைத்த நான்குவடம் சங்கிலி அணிவதில் அதிக விருப்பம் கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தப் பெண்கள் குளிக்கும் போது கட்டித் தயிரை, சோப்பைப் போலப் பயன்படுத்துவதாகவும் சொல்லப்படுகிறது.

# பெட்டிப் பணம்

இந்தப் பிரிவினரிடையே நடைபெறும் திருமணத்தில் பெட்டிப் பணம் என்ற ஒரு வழக்கம் இருக்கிறது. அதாவது, மணப்பெண்ணின் பெற்றோர் மாப்பிள்ளையின் பெட்டியில் திருமணத்தின்போது பணம் வைக்க வேண்டும். பணம் இவ்வளவுதான் வைக்க வேண்டும் என்கிற ஒரு கட்டுப்பாடு இல்லையென்றாலும், பணத்தின் அளவு மணமகளின் வீட்டாரின் பொருள் வளத்தைப் பொருத்து அமைகிறது. இந்தத் தொகைக்குப் பெட்டிப் பணம் என்று பெயர்.

# ஆரோக்கியத்தின் ஆதாரம் ! SKM மாடு, கோழித் தீவனங்கள்.



கால்நடைகளின் பால்வளம் பெருக,

கோழிகளின் முட்டை உற்பத்தி பெருக,

கறிக்கோழிகளின் எடை அதிகரிக்க,

SKM தீவனங்களை உபயோகியுங்கள்.

TIPS / CBE / 95

தயாரிப்பாளர்கள்

**SKM அனிமல் ஃபீட்ஸ் அண்டு புட்ஸ் (இந்தியா) லிமிடெட்**

180, காந்திஜி ரோடு, ஈரோடு - 638 002.

போன் : 217212, 217216. தந்தி : ''பவுல்ட்ரி'', ஈரோடு,

டெலக்ஸ் : (0856 - 226) SKM IN, ஃபேக்ஸ் : (0424) - 216427

*With Best Compliments From*

Telex: COMMANDER

Office: *211837*
*211838*
*211768*
Res : *75839*
*73455*

# *Bharath Refineries & Oil Mills*

Manufacturers of **COMMANDER** Brand Refined Oil

72, Park Road, ERODE - 638 003

TNGST RC No. 6/02/01/687074 CST No.431040/Dt. 1-4-65 TNETA No.184

With best compliments from:

**Raji Chit Funds,**

**Annanmar Chit Funds (P) Ltd.,**

**Raji Finance**

**Raji Medicals**

**Raji Feeds,**

**Raji Poultry and Agri. Farm**

**Raji Feeds (P) Ltd.**

**32, Patel Road, ERODE-I**


# பெரியார் மாவட்டத்தில் வழங்கும் நாட்டுப்புறப் பாடல்கள்



**பெ**ரியார் மாவட்டத்தில் கிராமப் பகுதிகளில் வாழும் பெரும்பான்மையான மக்களிடையே இன்றும் ஏட்டில் எழுதப்படாத பாடல்கள் வழங்கி வருகின்றன. அவற்றுள் தாலாட்டுப் பாடல்கள், வேலையின் பளு தெரியாமல் இருக்கப் பாடப்படும் தொழில் பாடல்கள், கும்மிப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், திருமணப் பாடல்கள் பக்திப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என பல வகைப்படும். இத்தகைய நாட்டுப்புறப் பாடல்களில் பாமர மக்களின் கற்பனையும், உணர்ச்சியும், எளிமையான இனிமையான பாடல் போக்கும் கலந்து, கேட்பவரைத் தன்வயமாக்கும் தரத்தின. இன்றைய நாகரிக சூழ்நிலையில், பெண்களிடையே தாலாட்டுப் பாடல்கள் என்பது அருகி விட்டது என்றே கூறலாம். குறிப்பாக நகர்ப்புறங்களில் தாலாட்டுப் பாடல்கள் கேட்காமல் தூங்கும் குழந்தைகளே அதிகம் என்கிற சூழ்நிலை உருவாகி வருகிறது. நவீன தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களும், திரைப்படப் பாடல்களும் அயல்நாட்டு இசை மோகமும், நாட்டுப்புறப் பாடல்களுக்குத் தடையாக இருந்தாலும், கிராமப் பகுதிகளில் விஞ்ஞான வீச்சின் தாக்கம் அதிகமாக இல்லாத இடங்களில் தாலாட்டுப் பாடல்களும், நாட்டுப்புற இசையும், இன்றும் நிலவி வருவது தமிழ்நாட்டில் நாட்டுப்புறப் பாடல்கள் இன்றும் உள்ளன என்பதற்குச் சான்றாக விளங்குகின்றன. கிராமப் பகுதிகளிலும் கூட வசதி படைத்த குடும்பத்தில், தாலாட்டுப் பாடல்கள் தவிர்க்கப்பட்டே வருகின்றன. ஆனால் வசதி குறைந்த குடிசைகளிலும், குடியிருப்புகளிலும், தங்கள் செல்லக் குழந்தைகளை மெல்ல தூங்க வைக்க தாலாட்டுப் பாடல்கள் இன்றும் ஏழ்மையான தாய்மார்களால் பாடப்பட்டு வருகின்றன. அவற்றுள் பெரியார் மாவட்டத்தில் இன்றும் பாடப்பட்டு வரும் சில நாட்டுப்புறப் பாடல்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

**தாலாட்டு**

"வாசலிலே வன்னிமரம்



உங்கள் வம்சமோ ராசர்குலம்
என் ராசகுலம் பெற்றெடுத்த
ரத்தினமே நித்திரை போ!
கண்ணான தம்பிக்கு நாங்கள்
காதுகுத்தப் போறோமென்னு
உன்
பொன்னான மாமனுக்கு
நாங்கள் போட்டோம் கடுதாசி!
அரும்பான மாலைகட்டி என்
கண்ணே அவசரமாய்
வந்தார்கள்
முன்னூறு வெற்றிலையும் என்
கண்ணே உனக்கு
முதல்மாமன் சீரும் வரும்!
நானூறு வெற்றிலையும் என்
கண்ணே உனக்கு நடுமாமன்
சீரும் வரும்!
கற்கண்டுத் தட்டுவரும் என்
கண்ணே உனக்குக் கடைசி
மாமன் சீரும் வரும்!
பூவாய் உதித்தவனோ நாங்கள்
செய்த புண்ணியத்தால்
வந்தவனோ!
அரும்பாய் உதித்தவனோ
நாங்கள் செய்த



அருந்தவத்தால் வந்தவனோ!"

**கல்யாணம்**

"பாக்குமரம் பொளந்து
பாதெலெ பந்தலிட்டு
தேக்குமரம் பொளந்து
தெருவெல்லாம் பந்தலிட்டு
என்ன என்ன சீதனங்க
எங்களொட இளங்கொடிக்கு
பட்டி நெரஞ்சு வர
பசுமாடு சீதனங்க
உக்காந்து பால்கறக்க
முக்காலி சீதனங்க"

## சோம்பேறிப் பெண்

"சோறாக்கத் தெரியாத
சோம்பேறிப் பெண்ணுக்கு
வீராப்பு ஏதுக்கடி கள்ளி
தாவாரம் பெருக்கத்
தெரியாத பெண்ணுக்குப்
பூமாலெ ஏதுக்கடி"


## மாரியம்மன் பாட்டு

"அம்மா வாரா அம்மா வாரா
கம்பங் காட்டுக் குள்ளே
அவ என்ன கொண்டு வாரா
அவ ஏது கொண்டு வாரா
சிங்கம்புலி ரதம் ஏறி
சீமை பாக்க வாரா".

## கும்மிப் பாட்டு

"நாலுமூரெ வயலக்குள்ளே
லேலே லோக்கும்மி லேலேலோ
நாத்து நெடக் கூழெப்
பொண்ணு லேலே
லோக்கும்மி லேலேலோ
கூழெப் பொண்ணு நெட்ட
நாத்து லேலேலோக்கும்மி
லேலேலோ
குலுங்குதம்மா வையெ
நெல்லு லேலே லோக்கும்மி
லேலேலோ."





# அய்யம்புதூர் சொல்லும் அறிவுரை

பெரியார் மாவட்டம் கோபிக்கு அருகில் அய்யம்புதூர் என்ற ஒரு வளம் நிறைந்த சிற்றூர் உள்ளது. ஈரோட்டிலிருந்து வடமேற்கே சுமார் 35 கிலோ மீட்டர் தொலைவில் சிறுவலூர் அரசு ஆரம்பச் சுகாதார நிலைய எல்லைக் குட்பட்ட எழிலார்ந்த இயற்கை வளம் செறிந்த ஊராக விளங்கி வருகின்றது.

**இரண்டுக்குமேல் எப்போதும் வேண்டாம்**

இன்றைய நிலையில் இவ்வூரின் மொத்த குடும்பங்கள் 107. மொத்த மக்கள் எண்ணிக்கை 377 பேர் மட்டுமே. தங்கள் குடும்பத்தில் வாரிசுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்துவிட்டதெனில் அத்துடன் நிறுத்திக் கொண்டு விடுகின்றனர். முதலில் பெண் குழந்தை பிறந்தாலோ அடுத்தாற்போல் ஆணோ அல்லது பெண்ணோ இரண்டுக்குமேல் வேண்டாம் என்று உறுதியாக இருக்கின்றனர்.

குடும்ப நலத் திட்டத்திற்கு அனைத்து ஊர்களுக்கும் ஒரு முன்னோடியாக இவ்வூர் விளங்குவதால் இவ்வூர் குடும்ப நலத் திட்டத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

**உள்ள நிலம் முழுவதையும் தக்க முறையில் பயன்படுத்தி, அது தன்னால் முடிந்த அளவுக்குப் பயன் கொடுக்கும் படிச் செய்தால், அது மக்கள் தொகை முழுவதையுமே காப்பாற்றும் என்று நான் நிச்சயமாகக் கருதுகிறேன்.**



*With best compliments*

*from*

# GOBI TALUK

# BUS OWNERS ASSOCIATION

K.S.R. Complex, Opp. R.T.O. Office

Erode Main Road, Gobichettipalayam - 638 476

| *President* | *Secretary* | *Treasurer* |
|---|---|---|
| **A.S. Ramamoorthy** | **V.S. Rathinasamy** | **P.R. Viswanathan** |

**With Best**

**Compliments From**

# DRIVING SCHOOL OWNERS

***GOBI*** ❄ ***BHAVANI*** ❄ ***SATHY*** ❄ ***ANDHIYUR***

**PERIYAR DISTRICT**

# 3000 ஆண்டுகட்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் கண்டுபிடிப்பு

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலைப் பாறைகளில் வரலாற்றுக்கு முந்தைய கால ஓவியங்களையும், பண்டைய தமிழ் எழுத்தில் தமிழ் பிராமி எழுதப்பட்ட ஒரு கல்வெட்டையும் புதிதாகக் கண்டறிந்திருக்கிறது.

குடுமியான்மலை, அங்குள்ள கி.பி.7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறப்புமிக்க இசைக் கல்வெட்டால் வரலாற்றறிஞர்களுக்கு நன்கு அறிமுகமான ஓர் ஊராகும். இவ்விசைக் கல்வெட்டுள்ள மலையின் மேற்குப் புறத்தில் ஓர் இயற்கையான குகைத்தளம் உள்ளது. இங்கு கல்லில் செதுக்கப்பட்ட ஐந்து படுக்கைகள் காணப்படுகின்றன. இவை சமண முனிவர்கள் வாழ்ந்ததை நினைவூட்டுபவை.

இந்தக் குகைத் தளத்தில் முகப்புப் பாறைச் சரிவில் பாறை ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. இவை இதுவரை தொல்லியலாரின் பார்வையிலிருந்து எப்படியோ தப்பிவிட்ட, கருப்பு வண்ணத்தில் பெரிய அளவில் வரையப்பட்டுள்ள இவ்வோவியங்களில், இரண்டு வீரர்கள் போரிடுவது போன்று வரையப்பட்டுள்ளன. இவற்றின் காலம் கி.மு. 1000 – 500க்கு இடைப்பட்டதாக இருக்கலாம். இவ்வோவியங்கள் மேலும் தீவிரமாக ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். கருப்பு வண்ணத்தில் தீட்டப்பெற்ற பாறை ஓவியங்கள் தமிழகத்தில் மிக அரிதாகவே காணப்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பண்டைத் தமிழ் எழுத்துக் கல்வெட்டு ஒன்றும் இம்மலையிலேயே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். கல்வெட்டின் வாசகம் "நாழள் கொ(ற்)றி தந்த பளீய்" என்றுள்ளது. நாழள் கொற்றி என்ற பெண், சமண முனிவருக்குக் கற்படுக்கை அமைத்துக் கொடுத்தாள் என்பது இக்கல்வெட்டின் பொருளாகும்.

புதிதாக அறியப்பட்டுள்ள கல்வெட்டும் ஓவியமும் குடுமியான்மலைப் பகுதியின் சமூக வரலாற்றை அறிந்து கொள்ளக் கிடைத்த சான்றுகளாகும். இக்கல்வெட்டும் ஓவியமும் இத்துறைக் கல்வெட்டாய்வாளர்கள் திரு சு. இராஜகோபால் மற்றும் திரு வெ. வேதாசலம் ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டன. சிந்துவெளி எழுதது மற்றும் தமிழ் பிராமி எழுத்தில் ஆழமான ஆய்வு செய்து வரும் அறிஞரான 'தமிழ்ச்செம்மல்', திரு ஐராவதம் மகாதேவன் அவர்கள் இக்கல்வெட்டினைப் படிக்க மிகவும் உறுதுணையாக இருந்தார் – எனத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இயக்குநர் திரு நடன. காசிநாதன் தெரிவித்துள்ளார்.

**YOUR PROBLEM AND SEARCH FOR THE RIGHT SCHOOL ENDS HERE**

# ERODE HINDU KALVI NILAYAM

**Matriculation Higher Secondary School**

**Mamarathupalaym, Erode-638 004**

**Phone: 70222, 75856**

## PIONEERS IN EDUCATION

* English Medium with Tamil, Hindi and Sanskrit.
* Admission: Nursery to Std.XII (Co-Education)
* Hostel Facilities with Homely, Tasty Food, Love and Care.
* Beautiful Buildings blended in Natural Atmosphere.
* Sports: Outdoor and Indoor Games, Karate, Band Set, N.C.C., Scouts, Guides and Music.
* Centum Results in Matriculation and Higher Secondary Public Examinations.
* Run by experienced Educationists, who have established Schools, Colleges and Technical Institutions for over a decade.
* For further details contact School Office.

**Rana K.V. Laxmanan**
*Secretary & Correspondent*

**K.K. Balusamy**
*President*

தொடக்கம் 1928

தொலைபேசி: கோபி - 23491, 22017
ஈரோடு கிளை - 214483

**கோபிசெட்டிபாளையம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிட். நெ.கே.544**

கிளைகள்

கோபிசெட்டிபாளையம்

1. நேதாஜி ரோடு, ஈரோடு, 2, கொண்ணமடை, நம்பியூர்.

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், கோபி மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்காக, கீழ்க்காணும் விவரப்படி தேங்காய், பருத்தி மற்றும் மஞ்சள் ஏல விற்பனையைச் சிறப்பாக நடத்தி வருகிறது.

| இடம் | விளைபொருள் | நாள் |
|---|---|---|
| கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத் தலைமையிடம், கோபி. | தேங்காய் | பிரதி வாரம் சனிக்கிழமை |
| " | " பருத்தி | பிரதி வாரம் வியாழக்கிழமை |
| எ.செட்டிபாயைம் | பருத்தி | பிரதி வாரம் ஞாயிற்றுக்கிழமை |
| ஈரோடு கிளை | மஞ்சள் | மஞ்சள் மார்க்கெட் உள்ள எல்லா நாட்களிலும் |

விற்பனை முடிந்தவுடன் விற்பனைத் தொகை வழங்கப்படுகிறது.

சங்கத்தில் தரமான விதை நெல் வகைகள் 'கோவை விதைகள்' என்ற பெயரில் உற்பத்தி செய்யப்பட்டு கோபி மற்றும் தமிழ்நாடெங்கும் தேவையானவர்களுக்கு அவ்வப்போது விற்பனை செய்யப்பட்டு வருகிறது. விவசாய விளைபொருட்களை எடுத்துவர லாரி இரண்டு சங்கத்தில் உள்ளன.

விதை சுத்திகரிப்புக்கென்று பெரிய அளவில் இயந்திரங்கள் பொறுத்தப்பட்டு செயல்பட்டு விவசாயிகளுக்கு அரும்பெரும் பயன் ஈட்டிக் கொடுத்து வருகிறது.

இத்துடன் விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சிமருந்துகள், விவசாய உபகரணங்கள் முதலியவைகளை விற்பனை செய்து வருகிறது.

பவானிசாகர் மார்க் கலப்புரம் இச்சங்கத்தால் தயாரிக்கப்படும் மிகச் சிறந்த கலப்புரமாகும். இது மட்டுமா!

கோபி வாழ் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்கியும் அரும்பணியாற்றி வருகிறது.

மேலும் மாணவ மாணவிகளுக்குத் தேவையான புத்தகங்கள், குறிப்பேடுகள், எழுதுபொருட்கள் ஆகியவற்றை மலிவான விலையில் விற்பனை செய்து வருகிறது. சங்கம் பெறும் நிரந்தர வைப்புகளுக்கு வருடத்திற்கு 15 சதவிகித வட்டி வழங்கி வருகிறது.

எனவே பொது மக்கள் அனைவரும் இச்சங்கத்திற்கு நல்லாதரவு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**எம். பொன்னுசாமி,** பி.ஏ.,
துணைப்பதிவாளர்/தனி அலுவலர்

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பிறந்த நாள் (13.4.96) நினைவுக் கட்டுரை.

# ப(ா)ட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்



'மக்கள் கவிஞர்' என்கிற சிறப்புக்கு உரியவரான பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள பட்டுக்கோட்டை வட்டத்தைச் சேர்ந்த 'செங்கம்படுத்தான்காடு' என்கிற கிராமத்தில் 13.4.1930-ஆம் ஆண்டில் பிறந்தார். பெற்றோர் பெயர் திரு அருணாசலம் பிள்ளை-திருமதி விசாலாட்சி அம்மையார். இளைய மகனான கல்யாணசுந்த ரத்திற்குக் கணபதி சுந்தரம் என்கிற சகோதரரும், வேதாம்பாள் என்ற சகோதரியும் உண்டு.

கவுரவாம்பாள் என்கிற தம் உறவுமுறைப் பெண்ணையே, 1957-ஆம் ஆண்டில் திருமணம் செய்துகொண்டார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இவர்களுடைய திருமணம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் தலைமையில் நடைபெற்றது. அதற்கடுத்த ஆண்டே ஓர் ஆண் குழந்தைக்குத் தந்தை யானார் அவர்.

**கைவந்த கலை**

கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பெண்ணடிமைத் தனம் நீங்கப் பாடியவர். முதலாளி தொழிலாளி பேதம் ஒழியப் பாடியவர். ஒற்றுமை ஓங்கப் பாடியவர். காதலைப் பாடும்போது கூட-

**'உழவனும் ஓயாத உழைப்பும்**
**போல் நாமே**
**ஒன்றுபட்டு வாழ்க்கையில்**
**என்றுமிருப்போமே'**

—என்று பாடும் அளவிற்கு உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தவர். பாடல் அடிகளில் கருத்துக்களை ஏற்றிக்கூறும் 'தற் குறிப்பேற்ற அணி' இலக்கணத் தோடு, எண்ணற்ற பாடல்களை ஏட்டுலகிலும், திரையுலகிலும் வழங்கியவர் பட்டுக்கோட்டையார்.

ஏன், சிறுவர்களுக்காகப் பாடல் எழுதும்போது கூட, வெல்லத்தில் மருந்தைக் கலப்பது போல் சீர்திருத்தக் கருத்துகளை இதமாக, இனிமையாகக் கையாள்வது அவருக்குக் கைவந்த கலையாக இருந்தது.

இதோ, உதாரணத்திற்கு ஒரு பாடலின் சில வரிகள்-

**'வேப்பமர உச்சியில் நின்னு**
**பேயொன்னு ஆடுதுன்னு**
**விளையாடப் போகும்போது**
**சொல்லிவைப்பாங்க - உன்**
**வீரத்தைக் கொழுந்திலேயே**
**கிள்ளிவைப்பாங்க - அந்த**
**வேலையற்ற வீணர்களின்**
**மூளையற்ற வார்த்தைகளை**
**வேடிக்கையாகக் கூட**
**நம்பிவிடாதே - நீ**
**வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து**
**வெம்பிவிடாதே !'**

—இப்படியெல்லாம் அவரைப் பற்றிய செய்திகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

**ஏட்டிலும், திரையிலும்**

ஆனால்- ஜனசக்தி, தாமரை போன்ற இதழ்களில் பாடல் எழுதத் தொடங்கி, பிறகு திரையுலகில் நுழைந்து ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கி நிகரற்று விளங்கிய நேர்த்திமிகு கவிஞரான பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பற்றி, அவர் வளர்ந்தவிதம் பற்றி விரிவாக எழுதுவதே என்னுடைய நோக்கம்.

நாம் விரும்புகிறோமோ இல்லையோ, நாள்தோறும் ஏதாவது திரைப்படப் பாடலை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் அல்லது ஏதேனும் விழாக்களில் கேட்டுத்தான் தீரவேண்டி யிருக்கிறது.

**செந்தமிழ் நாடென்னும்**
**போதினிலே இன்பத்**
**தேன்வந்து பாயுது காதினிலே'**

—என்று மகாகவி பாரதியார் சொன்னதுபோல, இந்தக் காலத்தில் நம் காதில் விழும் அப்பாடல் தேனாகவோ பாய்கிறது? இப்படி யொரு கேள்வி எழுப்பப்படுமானால் அதற்குப் பெரும்பாலோர் தரும் பதில் 'இல்லை' என்பதாகவே இருக்கும்.

**தமிழுக்கு மரியாதை**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், கே.டி. சந்தானம், எஸ்.டி. சுந்தரம், கொத்தமங்கலம் சுப்பு, பாபநாசம் சிவன், உடுமலை நாராயணகவி, மருதகாசி, கவிஞர் சுரதா, பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன் போன்ற கவிஞர் களெல்லாம் திரையுலகில் ஆட்சி செலுத்திய காலத்தில் அங்கும் தமிழுக்கு மரியாதை இருந்தது. கவிஞர் பெருமக்கள் இசைவாணர்

களினால் பாராட்டப்பட்டார்கள். ரசிகப் பெருமக்களால் மதிக்கப் பட்டார்கள். தமிழிசைக்குத் துறை தோறும் தக்க மரியாதை கிடைத்தது.

ஆனால் இன்றைக்கு?

சில ஆண்டுகளுக்கு முன்புவரை வெளிவந்த திரைப்படப் பாடல்கள், கேட்போர் நெஞ்சில் அழுத்தமாகக் காலூன்றிவிடக் கூடியவைகளாக இருந்தன. இன்றைக்கும் பாட்டுக்கு முன், பின்னணி இசை ஒலிக்கத் தொடங்கியதுமே பாட்டு இன்ன தெனச் சொல்லிவிடத்தக்க சொற் கட்டோடு அவை திகழ்ந்து வருகின்றன.

ஆனால், இப்போதைய பாடல்கள்? திரையரங்கில் கேட்கிறபோது, சிலருக்கு 'ஜிலுஜிலு' வென்று இருக்கக்கூடுமே தவிர, அரங்கைவிட்டு வெளியே வருகிற வரைகூட அவை நினைவில் நிற்பதில்லை. சில பாடல்களின் இசை மட்டுமே, அதுவும் சில நாட்களுக்கு நம் செவிகளில் ரீங்காரம் செய்து கொண்டிருக் கின்றன.

இதற்குக் காரணம், தவறான இசை முறை அல்லது தமிழிசை யைக் கடந்த பாடும் முறை தான். அது நம் காதில் ஏதோ புதிதாகப் பாடுவது போன்றதாக இருக்கலாம்!

**முதல் படம்**

திறமைமிக்க கதை வசன கர்த்தாவாகத் திகழ்ந்த திரு ஏ.எல் நாராயணன் மூலமே முதன்முதல் திரையுலகில் புகுந்தார் இந்தக் கட்டுரை நாயகர் திரு பட்டுக் கோட்டை அ. கல்யாணசுந்தரம் அவர்கள். 'படித்த பெண்' என்பது தான், 1951-இல் இவர் பாட்டெழுதிய முதலாவது திரைப்படமாகும்.

தாள்களைத் தொகுத்து வைத்துக் கொண்டு, பரீட்சை எழுதும் 'கிளிப் பேடு' அட்டை, அல்லது தடித்த 'பைல்' அட்டையில் தாளம் போட்டுக்கொண்டே இசை முணுமுணுப்போடு எழுதுவது இவருடைய வழக்கம். பெரும் பாலான இவருடைய பாடல்கள் இவர் போடும் மெட்டிலேயே அங்கீகாரம் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

முதன்முதலில் இவர் மெட்டுக்கு என்று எழுதியது 'புதையல்' என்ற படத்தில் வந்த பாடல்

**"சின்னச் சின்ன இழை**
**பின்னிப் பின்னி வரும்**
**சித்திரக் கைத்தறிச்**
**சேலையடி....."**

—என்பதுதான்.



இன்றைக்கும் மெடடுககு எழுதப்படும் பாடல்களைப் பார்க் கிறோம். கேட்கிறோம். அதைப் போல் இனிப்பதுண்டா? பொருட் செறிவோடு இருப்பதுண்டோ?

திரைப்படத் துறையில் ஒரு எட்டாண்டுக் காலம் பாடல் எழுதி இணையற்றுத் திகழ்ந்த பட்டுக் கோட்டையார் பெற்றிருக்கும் புகழ் பல ஆண்டுக் காலத்திற்கும் மங்காது, மறையாது.

அவரெழுதி, ஏடுகளில் வெளி யான பாடல்கள் சிலகூட, திரைப் படங்களிலே இடம்பெற்றதுண்டு. அவற்றையும் சேர்த்தால்கூட 300-ஐத் தாண்டாது! இவ்வளவு குறைவான பாடல்களுக்குள்ளே எவ்வளவு நிறைவான புகழ் பாருங்கள்!

**'எத்தனையோ இன்பம் இந்த**
**நாட்டிலே உண்டு,**
**அத்தனைக்கும் பெரிய இன்பம்**
**பாட்டிலே உண்டு!**

—என்றெழுதிய பெருமையாளர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

**புரட்சிக் கவிஞர் தொடர்பு**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களிடம் சில காலம் குருகுல வாசம் இருந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். நேரில் அவரைப் பார்ப்பதற்கு முன்னாலேயே, அவருடைய எழுச்சிமிகு பாடல் களால் பெரிதும் ஈர்க்கப்பட்டி ருந்தது இவர் இதயம்.

அதனாலேயே ஆத்திகப் பெரு மக்கள் எதையும் எழுதுவதற்கு முன்னால் பிள்ளையார் சுழி போடுவதைப் போல 'பாரதிதாசன் வாழ்க' என்று தாளின் தலைப்பில் எழுதிவிட்டுத்தான், பாட்டை ராகத் தோடு எழுதவே தொடங்குவார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

அப்படியோர் குருபக்தியை இன்றைய திரைப்படப் பாடலா சிரியர் எவரிடமாவது நம்மால் காணமுடிகிறதா?

இப்படிச் சொல்லுவதால் 'கடவுள் பக்தியே இல்லையா அவருக்கு?' என்று கேட்க வேண்டாம். இளம் வயதில் அவர் சுய மரியாதைக்காரர்தான். சென்னைக்கு வந்துவிட்ட பிறகு வேறு வகை மன பாதிப்புகளுக்கும் அவர் ஆளானது உண்டு; தந்தையாருக்கு எழுதிய கடிதத்தில்கூட 'முருகப்பெருமானைத் தவறாமல் வழிபட்டு வரவும்' என்றெல்லாம் எழுதி யிருக்கிறார்.

தன் மகனுக்கு 'குமாரவேல்' என்றுதான் அவர் பெயரிட்டார்.

### பாடல் கற்ற விதம்

தன்னுடைய பாடலை அவரே பாடிக் காட்டுவார் என்றால் 'பட்டுக்கோட்டையார், முறைப்படி இசை பயின்றவரா?' என்று கேட்காதீர்கள். அவருடைய தந்தையாரே ஒரு கவிராயர்; 'வழிநடைக் கும்மி' எழுதியவர். மாலைவேளைகளில் விவசாய வேலைகள் முடிந்து ஓய்வா யிருக்கும்போது உரத்த குரலில் கிராமிய மணங்கமழப் பாடிக் களிப்பது அவர் வழக்கம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்த ரத்தின் அண்ணன் கணபதி சுந்த ரமும் அப்படிப் பாடல் எழுதவும், பாடிக்காட்டவும் கூடியவராக இருந்தார்.

தென்னை மரத்தில் மாங்காயா காய்க்கும்? அதேபோல் அவர்களைப் பின்பற்றித்தான் நம் கல்யாணசுந்த ரமும் பாடல் எழுதப் பழகினார்; பாடவும் கற்றார்- தம் பத்தொன்பதாம் வயதில்!

எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து வயற்காட்டில் உழைக்கவே நேரம் சரியாக இருந்ததால் சிறுவயதில் பள்ளியில் படிக்கும் நாட்டம் அவருக்கு இல்லாதிருந்தது. எனினும் குடும்பத்தார் பிடிவாதத் தால், சின்னவயதில் இரண்டாம் வகுப்புவரைதான் படித்தார். அதற்குமேல் பள்ளிப் படிப்பிற்குப் புள்ளி விழுந்தது.

### நடைக்கு அஞ்சாதவர்

இளமைக் காலத்தில், தமது ஊரான செங்கம்படுத்தான் காட்டிலிருந்து, பக்கத்து நகரமான பட்டுக்கோட்டைக்கு நடந்து போய் அடிக்கடி சினிமா பார்ப்பதும், பார்த்த படத்தில் கேட்ட பாடலை உரத்த குரலில் பாடிக்கொண்டே இரவில் நடந்தே கிராமத்திற்கு வருவதும் வாடிக்கையாகியது அவருக்கு. இப்போது போல அப்போதெல்லாம் 'மேட்னி ஷோ', 'டவுன் பஸ்' எல்லாம் கிடையாது.



**நாட்டின் பெருமையை வளர்க்கக் கல்வி அத்யாவசியம் அவர்கள் சுயமரியாதையுடனும் சுகமாகவும் வாழத் தொழில் வளர்ச்சி அவசியம்.**

**–தந்தை பெரியார்**

எப்போதுமே நடைக்கு- பொதுவாக உழைப்பிற்கு அஞ்சிய வரல்ல நமது பட்டுக்கோட்டையார்.

நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவரான அவர், தகுந்த வேலையைத்தேடி, இளமைக் காலத்தில் ஊர் ஊராக அலைந்த துண்டு. 1947-48-இல் தான், மதுரைக்குப் போய் சக்தி நாடக சபாவில் நடிகராகச் சேர்ந்தார்.

அதுவரை அவர் பட்டபாடு, தாங்கிய துன்பங்கள் சொல்லி முடியாது. சேலத்திலிருந்து திருச்சிக்கு நடந்தே வந்து, திருச்சியிலிருந்து தஞ்சைக்கு நடந்தே வந்து, தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டை வழியாகத் தம் சொந்த ஊரான செங்கம்படுத்தான் காட்டுக்கும் அவர் நடந்தே வந்த காலமெல்லாம் உண்டு.

சோம்பிக் கிடப்பதோ, நம் முடைய அதிர்ஷ்டம் அவ்வளவு தான் என்று அலுத்துப் போவதோ அவரால் முடியாததாக இருந்தது. அதன் பிரதிபலிப்பாக எழுந் ததுதான் பிற்காலத்தில் 'நாடோடி மன்னன்' திரைப்படத்திற்காக அவர் எழுதிய பாடல்-

**'தூங்காதே தம்பி தூங்காதே**
**சோம்பேறி என்றபெயர்**
**வாங்காதே!**
**.......... .........**
**நல்ல பொழுதையெல்லாம்**
**தூங்கிக் கெடுத்தவர்கள்**
**நாட்டைக் கெடுத்ததுடன்**
**தானுங் கெட்டார் சிலர்**
**அல்லும் பகலும் தெருக்**
**கல்லா இருந்துகிட்டு**
**அதிர்ஷ்டம் இல்லையென்று**
**அலட்டிக் கொண்டார்!...'**

—படவுலகில் பாடல் தொடர்ச்சியாக எழுதத் தொடங்கிச் சம்பாதிக்கலான பிறகும்கூட, ஒரு பக்கம் வேட்டியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, இன்னொரு பக்கம் ஃபைலைப் பிடித்துக் கொண்டு 'நடந்தேபோகும்' கிராமவாசி நிலைதான் அவருக்குப் பிடித்திருந்தது.

### பதினேழாவது தொழில்

திரு. முருகு இராசாங்கம் எம்.ஏ., என்பவர் ஒரு கட்டுரையில் நம் கவிஞரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

'மக்கள் கவி பட்டுக்கோட்டை யின் வாழ்க்கை மக்களோடுதான். மாடு மேய்த்து மாம்பழம், இட்லி, முறுக்கு, தேங்காய், கீற்று ஆகியவற்றை வியாபாரம் செய்து, மீன் பிடித்து, உப்பெடுத்து, பாடி, ஆடி, நடித்து இப்படிப் பதினாறு தொழில்கள் செய்து, கடைசியாக மேற்கொண்ட கவிதைத் தொழில் அவரது பதினேழாவது தொழிலாகும்'.

இவ்வாறெல்லாம் பாடுபட்ட தனாலே தான் ஏழைப் பாட்டாளி வர்க்கத்தின் மீதான தாக்கம் கல்யாணசுந்தரத்தின் பாடல்களி லெல்லாம் உணர்வுப்பூர்வமாகப் பிரதிபலிப்பதாக இருந்தது.

### தனியுடைமையைச் சாடுதல்

இலட்சம் இலட்சமாக, கோடி கோடியாகச் செலவிட்டுப் பட



**காலம் முறைகளை மாற்றுமே தவிர மனப்போக்கையும் உணர்ச்சியையும் மாற்றி விடாது!**

**—அறிஞர் அண்ணா**

மெடுக்கும் படமுதலாளிகள் வர்க்கம், இவ்வாறாகப் பட்டுக்கோட்டையார் துணிவோடு எழுதிய தொழிலாளி வர்க்கப் பாடல்களையும் ஏற்றுக் கொண்டது. இப்படிச் சொல்லுவதைவிட அப்படிப்பட்ட வட்டத்தில் இப்படிப்பட்ட பாடல்களை எழுதிப் புகழ் பெறப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தால் மட்டும்தான் முடிந்தது! வேறு யாரும் அதுவரை அப்படி எழுத முன்வந்ததாகத் தெரியவில்லை - யாருக்கும் துணிவில்லை!

பாபநாசம் சிவன், பக்திப் பாடல்களை நெருடல் இல்லாமல் எழுதித் திரையுலகில் வெற்றி கண்டார்.

உடுமலை நாராயணகவி சீர்திருத்தப் பாடல்களைத் திரையுலகில் புகுத்திச் சிறப்படைந்தார்.

கவிஞர் கண்ணதாசன் தத்துவப் பாடல்களையும், காதல் பாடல்களையும் பண்பட எழுதிப் பாராட்டுப் பெற்றார்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரமோ கிராமிய மணங்கமழும் எளிய சொற்களால் தனிவுடைமைக் கொள்கையைச் சாடி, அது காதல் பாட்டானாலும் சரி, பொதுவுடைமை மணத்தோடு எழுதிப் படவுலகில் மங்காப் பெருமை பெற்றார்.

இதனாலும், இளமைக் காலத்தில் விவசாயச் சங்கக் கொள்கைகளில் பெரும் ஈடுபாடு கொண்டிருந்ததாலும், கொள்கைக்காக உயிர்நீத்த பக்கத்து ஊர் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள் இரணியன், சிவராமன் ஆகியோரோடு பெரும் நட்புக் கொண்டிருந்ததாலும் இவரையும் - கம்யூனிசவாதி, மார்க்சீயக் கொள்கைகளில் மனம் லயித்தவர் என்றெல்லாம் சொல்லுவதுண்டு.

**சுயமரியாதைக் கொள்கை**

விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரான அவர், உழவர் பெருமக்களிடம், தொழிலாளர்களிடம், பாட்டாளி வர்க்கத்திடம், சமுதாயத்தின் கீழ்த்தட்டில் உள்ள வறிய வர்க்கத்தாரிடம் பெரிதும் தோழமை கொண்டிருந்தார் என்பது உண்மைதான். அதே நேரத்தில் அவர் மனம் சீர்திருத்தக் கொள்கைகளில் பெரும் பிடிப்புக் கொண்டிருந்ததை, அவரோடு நெருங்கிப் பழகியவர்கள் நன்கு அறிவார்கள்.

இவரும், பாவலர் வரதராசனும் அந்நாளில் சுயமரியாதைக் கொள்கையை விளக்கி, சீர்திருத்த இயக்க மேடைகளிலெல்லாம் தானே பாடலியற்றிப் பாடியது உண்டு. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா போன்றோர் பேசிய மேடைகளில் கூட கல்யாணசுந்தரம் எழுச்சிமயமாகப் பாடிப் பெருமை பெற்றிருக்கிறார். பெரியாரைப் பற்றித் தனிப்பாடல்களும் பாடியிருக்கிறார்.

இவர்கள் இருவர் மட்டுமல்ல; பேராவூரணி குழந்தையும் அப்படிப் பாடியிருக்கிறார் என்பார்கள், விவரம் அறிந்தவர்கள். அவ்வாறு கல்யாணம் எழுதிய பாடல்களிலே- 'நல்லதைச் சொல்பவன் நாத்திகனா?' என்ற பாடல் அ... பாதே மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது.

அக்காலத்தில் தஞ்சை மாவட்டத் திராவிடர் கழகப் பெரும் புள்ளிகளாக விளங்கிய தஞ்சை ராஜகோபால், திரு நா. விசுவநாதன், அணைக்காடு டேவிட், பட்டுக்கோட்டை இளவரி போன்றோரிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

**பாரதிதாசனார் சந்திப்பு**

அணைக்காடு டேவிட் உடனும், பாலையா என்கிற தோழரோடும்தான் அவ்வூர் ரங்கசாமிப்பிள்ளை தூண்டுதலோடு- புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பார்க்கப் புதுவைக்குச் சென்றார் அவர். இதற்குப் பிறகுதான் அவரிடம் சிலகாலம் குருகுல வாசம்.

முதல் சந்திப்பின்போதே, புரட்சிக் கவிஞரைப் பற்றித் தான் எழுதி வைத்திருந்த பாடலொன்றை இசையோடு அவரிடம் பாடிக் காட்டிப் பாராட்டுப் பெற்றிருக்கிறார், பட்டுக்கோட்டையார்.

**நல்லதோர் நடிகர்**

சக்தி நாடக சபாவில் இருந்த போது எம்.என். நம்பியார், சிவாஜி கணேசன் போன்றோர் அந்தக் கம்பெனியில் நடித்த வேடங்களிலெலாம்கூட நடித்த அனுபவம் கல்யாணசுந்தரத்திற்கு உண்டு. என் தங்கை, கவியின் கனவு, டி.எஸ்.பி., போன்ற நாடகங்களில் அவர் பங்கேற்று நடித்திருக்கிறார். கவியின் கனவு நாடகத்தில் ராஜ குருவாக நம்பியார் நடித்துப் புகழ்பெற்ற கதாபாத்திரத்தில் அவரும் நடித்ததுண்டு.

அப்போதெல்லாம் நகைச்சுவை நடிகர் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுக்கு மக்களிடம் இருந்த மதிப்பும் மரியாதையும் இவரைப் பெரிதும் கவர்ந்தது. ஆகவே, நகைச்சுவை நடிகராக வேண்டும்

என்று ஆசைப்பட்டு சில நாடகங்களில் அப்படியும் நடித்தார்.

அந்தக் காலத்திலெல்லாம் இவர் பெயர் ஏ.கே. சுந்தரம் என்றிருந்தது. பிறகு எதனாலோ, இந்தி கற்பதில் இவர் ஆர்வம் கொண்டார். ஓய்ந்த நேரத்தில் அதைப் படிக்கவும் தொடங்கினார் கல்யாணசுந்தரம். நாடகக் குழுவினரெல்லாம் இதனால் அவரை 'படாஜி' என்று கிண்டல் பண்ணத் தொடங்கவே, பாதியிலேயே இந்தி படிப்பதைக் கைவிட்டார்.

சக்தி நாடக சபையினர், இவர் வந்து சேருமுன் கைவசம் இருந்த நாடகப் பாடல்கள் சிலவற்றை, இவருடைய பாட்டுத்திறன் கண்டு அங்கங்கே மாற்றி எழுதித் தரச் சொன்னார்கள். அதைச் சரியாகச் செய்து தந்தார் இவர்.

**நண்டும் தொண்டும்**

இவ்வாறாகக் கவிதை எழுதும் திறனை வளர்த்துக் கொண்ட பட்டுக்கோட்டையார், புதுவைக்கு வந்தபின், அவ்வப்போது புரட்சிக் கவிஞரின் பாடல்களை அவரிடமே போய் இசையோடு பாடிக் காட்டுவார். தானெழுதியவற்றையும் பாடிக் காட்டுவார். அவரெழுதும் பாடல்களில் உரிய திருத்தங்களைச் சொல்லுவார் பாவேந்தர்.

ஒருசமயம் 'ஜனசக்தி' ஏட்டில் 'நண்டு செய்த தொண்டு' என்றோர் பாடல் வெளியாகியிருந்தது. 'அகல்யா' என்பவர் எழுதியிருந்தார். அதைப் பணிவோடு பாவேந்தரிடம் காட்டிப் படித்துப் பார்க்கச் சொன்னார் பட்டுக்கோட்டையார். பாவேந்தரும் பொறுமையோடு அதை வரிக்குவரி விரல் வைத்து நிதானமாகப் படித்தார்.

ஜனசக்திப் பாடலைப் படித்து முடித்த புரட்சிக் கவிஞர், "அடடா, என்ன அருமையான கருத்தைச் சொல்லியிருக்கான் பார்த்தியா? பாட்டுன்னா இப்படித்தான்பா இருக்கணும்!" என்று முகமலர்ச்சியோடு சொன்னார்.

கூச்ச சுபாவம் கொண்டவரான நம் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், ஒடிசலான தன் உடம்பை மேலும் வளைத்து நெளிந்து "ஐயா மன்னிக்கணும்; இது நான் எழுதின பாட்டுதானுங்கையா!" என்றாரே பார்க்கலாம். வியப்போடு அவரைப் பார்த்த புரட்சிக் கவிஞர் "அகல்யானில்லேப்பா மேலே போட்டிருக்கு?" என்று கேட்க- "நான்... அ. கல்யாணசுந்தரம் தானுங்களே!" என்றாராம்.

பாவேந்தரின் பாராட்டுத் தொடர்ந்தது. இதுதான், பட்டுக்கோட்டையார் எழுதி, முதலில் அச்சில் வெளியான பாடல் என்பார்கள். பிறகு இதே பாடல் 'புரட்சி நண்டு' என்ற தலைப்பிலும் கூட சில ஏடுகளில் வெளியிடப் பட்டது உண்டு.

"இது ஒன்றுபோதுமே அவரைப் பொதுவுடைமைவாதி என்று முடிவுகட்ட!" எனச் சிலர் எண்ணலாம்.

பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் சீர்திருத்தவாதி, சுயமரியாதை மீது மிகுந்த பற்றுடையவர் என்பதற்கும் பல உதாரணங்களைக் காட்டமுடியும்.

**குணாதிசயங்கள்**

சென்னைக்கு வந்து சேர்ந்து வாழத் தொடங்கிவிட்டபோதும் கூட, அவர் ஒரு கிராமவாசி போலத்தான் காட்சி தந்தார், நடத்து கொண்டார்.

படக் கம்பெனி கார் வருமென்று பொறுத்திருக்க மாட்டார். பஸ் ஸ்டாப்பில் போய் நிற்பார்- அல்லது நடக்கத் தொடங்கி விடுவார்.

சாப்பிடும்போது, திடுமெனக் கறி காய்களையெல்லாம் சாதத்தோடு சேர்த்தே பிசைந்து சாப்பிடுவது அவருக்குப் பிடிக்கும்.



**எதிர்ப்பைத் தாங்குவது என்பது எளிதானது அல்ல அத்தகைய எதிர்ப்பின் நடுவிலும் கடமையைச் செய்வதே பெருமை சேர்ப்பதாகும்.**

**—டாக்டர் எம்ஜி.ஆர்.**

படுக்கும்போது, சோபாவோ, சொகுசு மெத்தையோ அவருக்குப் பிடிக்காது. தரையில் வெறும் பாயைப் போட்டுக் கையைத் தலைக்கு மடித்து வைத்துப் படுக்கவே பிடிக்கும்.

சில கவிஞர்கள் போலப் பாடல் எழுத ஆடம்பரமான ஓட்டல்களிலே 'ரூம்' போட்டுத் தரச் சொல்லும் வழக்கம் அவரிடம் இல்லை. தியாகராய நகரில் உள்ள பனகல் பூங்காவில், புல் தரையில் உட்கார்ந்து அடிக்கடி அவர் பாடல் எழுதிக் கொண்டிருப்பதை ஏராளமானோர் கண்டிருக்கிறார்கள்.

நாட்டுப்புற வாடை எழுத்தில் வீசினாலும்கூட, புதுமைக் கருத்துக்கள் அதில் மிளிர்ந்திடலாயின.

பட்டுக்கோட்டையார் திரைப் படக் கவிஞர்களில் கொடிகட்டி ஆண்டாரே, தவிர, சொந்தமாக ஒரு வீடு வாங்கி வாழக்கூட கொடுத்து வைக்கவில்லை. கோடம்பாக்கத்தில் உள்ள 'டைரக்டர்ஸ் காலனியில் (அப்போது அண்ணாநகர்) சிறுகச் சிறுகசேர்த்து ஒரு கிரவுண்ட் நிலம்

மட்டும் வாங்கியிருந்தார். அதில் ஒரு வீட்டை உருவாக்கிப் பார்த்தாரில்லை. 'வீடுகட்ட வேண்டும்' கார் வாங்க வேண்டும் என்ற எண்ணமெல்லாம் இருந்தும் எல்லாம் கனவாகி விட்டது.

தன்னுடைய தாயைத் தெய்வம் போல் கொண்டாடிய பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம், தந்தை யாரின் வரலாறை ஒரு தனி நூலாக வெளியிடக் கருதியிருந்தார். தன் சொந்த ஊரிலேயே தந்தையாருக்குச் சிலையெடுக்கும் எண்ணமும் அவருக்கு இருந்தது.

என்னதான் திரையுலகில் பெரும்புகழ் பெற்றாலும்கூட, தன்னுடைய தந்தையாருக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தமது உறவினர்களை, நண்பர்களை யெல்லாம் ஒருவர் விடாமல் விசாரித்து எழுதுவது அவர் வழக்கம். 'சகதொழிலாளர்கள் முகம் கோணாமல் நடந்து கொள்ளுங்கள்' என்றும் தவறாமல் எழுதுவார். ஊர் விவகாரங்கள் அக்கடிதங்களில் விசாரிக்கப் பட்டிருக்கும்.

அத்தகைய தூய தொண்டுள்ளக் கவிஞரான பட்டுக்கோட்டையார் 30 வயதுகூட நிறைவடையாத நிலையில், திரையுலகில் எட்டாண்டுக் காலம்கூட முழுமையாகப் புகழ் நிறுவாத வகையில், திருமணம் முடிந்து ஓராண்டுக்கூட நிறைவு பெறாமல், மனைவி திருமதி கவுரவாம்பாள் கைக்குழந்தையோடு கதறிப் புலம்பும்படி மாண்டு போவார் என்று யார் கண்டார்கள்?

**கடைசிக் காலம்**

1959-ஆம் ஆண்டு வாக்கில், அவ்வப்போது அவருக்குத் தலை வலி ஏற்படலாயிற்று. சாதாரணத் தலைவலிதான் என்றாலும்கூட, அதற்கு ஏதாவது நிவாரணம் கண்டால்தான் நிம்மதி என்கிற முடிவுக்கு வந்தார் கல்யாணசுந்தரம். அவர்கள் குடும்ப டாக்டரான பத்மநாபன், "மூக்கில் ஒரு மைனர் ஆபரேஷன் செய்தால் சரியாகி விடும்" என்றார். அதற்கு எல்லோருடைய சம்மதமும் கிடைத்தது. திருவனந்தபுரத்துக் காரரான அந்த டாக்டர் கவனமாகத்தான் அறுவைச் சிகிச்சை செய்தார். என்ன காரணத்தினாலோ, 'மூக்கிலிருந்து இரத்தம் வருவது நிற்கவே இல்லை. வீட்டுக்கு வந்த பிறகும், பஞ்சில் இரத்தத்தைத் துடைத்துப் போட்டுக் கொண்டிருந்த அந்த மாபெரும் கவிஞர், அதற்கடுத்த நாளே தமிழகத்தை தேம்பியழச் செய்து விட்டுக் காலமானார் 8.10.1989-இல்

அவர் மாண்டுபோன பிறகு 1.5.1981-இல் பட்டுக் கோட்டை யாருக்குப் 'பாரதிதாசன் விருது' வழங்கப்பட்டது. பத்தாயிரம் ரூபாய் பணமுடிப்பும் அளிக்கப்பட்டது.

இந்நாளில் உருப்படியாக, ஒவ்வொருவர் உள்ளத்தையும் தொடும் விதத்தில் அல்லது ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைபெறும் விதத்தில் பாட்டாளி மக்களின் துயரம் மேட்டுக்குடியினருக்கும் எட்டும் விதத்தில், தொழிலாளத் தோழர்களெல்லாம் துன்பம் மறந்து இன்புறும் விதத்தில் திரைப்படப் பாடல்களை எழுதி, கரை காணாக் கடல் அளவு புகழ்பெற்றவர் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவர் புகழ் வாழ்க!

**— பி.எல். ராஜேந்திரன்**

## பெரியார் மாவட்டம் சில தகவல்கள்

மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 8,24,215 எக்டேர்.

மொத்தச் சாகுபடிப் பரப்பளவு 3,17,181 எக்டேர்

இதில் நீர்ப்பாசனப் பரப்பு 1,72,664 எக்டேர்

மானாவாரிப் பரப்பு 1,45,151 எக்டேர் 46 சதவிகிதம்

சராசரி ஆண்டு மழையளவு 717.0 மி.மீ.

இதில் தென்மேற்குப் பருவமழை காலத்தில் கிடைப்பது 30 சதவிகிதம்

வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் கிடைப்பது 47 சதவிகிதம்

குளிர் காலத்தில் கிடைக்கும் மழை 6 சதவிகிதம்


கோடைகாலத்தில் கிடைக்கும் மழை 22 சதவிகிதம்

வேளாண்மைத் துறையில் 7 வேளாண் கோட்டங்களும், வட்டார அளவில் 20 வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலக மையங்களும் உள்ளன.


BRINDHAVAN

பெருமை மிக்க வாழ்க்கைக்கு...
பிருந்தாவனில் சேமியுங்கள்!

25 வருட சேவை



கடந்த 25 ஆண்டுகளாகத் தொழில்களுக்கும், வாகனங்களுக்கும் நிதி உதவி அளித்து வந்த நாங்கள் இப்பொழுது டெபாசிட்டுகளையும் ஏற்றுக் கொள்வதோடு, அவற்றிற்கு சிறப்பான வட்டி விகிதத்தை வழங்கிடவும் முன் வந்துள்ளோம்.



சிறப்பம்சங்கள்

☆ 18 சதவிகித வட்டி மாதா மாதம் வழங்கப்படுகிறது!
☆ தேவையான பொழுது பகுதியாகவோ, அல்லது முழுமையாகவோ திரும்பப் பெற்றுக் கொள்ளும் வசதி!
☆ உங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ற வகையில், சிறப்புமிக்க சேமிப்புத் திட்டங்கள்!

பிருந்தாவன் பைனான்ஸ் & இன்வெஸ்ட்மென்ட்ஸ்,

ஈஸ்வரமூர்த்தி பில்டிங், 63, அகில் மேடு வீதி, ஈரோடு-1.

போன்: 78635, 216802.

"முறையான வழியில் முன்னேற்றம் காண்போம்"

*India's Mileage Champion*

87* KMPL

* Under Standard Test Conditions

bajaj
4S CHAMPION

With Free Maintenance for 1 full year

சுலபத் தவணை முறையிலும் பெறலாம்



மூர்த்தி & மூர்த்தி

27, காந்திஜி ரோடு,
ஈரோடு - 1

போன்: 79326, 73926, 216700

சப் டீலர்கள்

கற்பக சக்தி ஏஜென்சீஸ் கோபி

ஆனந்தா ஆட்டோ சென்டர் தாராபுரம்

ஸ்ரீபகவதி ஆட்டோ சென்டர் நாமக்கல்

தனலட்சுமி ஆட்டோ ஏஜென்சீஸ் திருச்செங்கோடு

அபிராமி ஆட்டோ ஏஜென்சீஸ் சங்ககிரி

P.A.S., ஆட்டோ ஏஜென்சீஸ் நம்பியூர்

# எளிமை

கவிஞர் டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

எளிமையினைப் பாடவந்தேன். இப்போ தெல்லாம்
இமயமலை முனிவர்களும் ஏற்ப தில்லை!
எளிமைக்கு முகவரியே காண வில்லை.
ஏனென்றால் துறவிகளே மூக்க றுத்தார்!
எளிமையினை அறிமுகம்நான் செய்வ தற்கே
இரண்டாவது நட்சத்திர ஓட்டல் தேவை!
எளிமையின்று வறுமைக்கோட் டிற்குக் கீழே
எழுந்திருக்க முடியாமல் மெலிந்தி ருக்கும்!

எளிமையின்று படுக்கையிலே கிடக்கும்! சற்றும்
என்னவென்று கேட்பதற்கோர் ஆளே இல்லை!
எளிமைக்கு வாய்ப்பேச்சு நின்று கண்கள்
இரண்டையுமே திறக்கமுடியவில்லை! மேலும்
எளிமைக்குக் காதடைத்து, நடப்ப தென்ன
என்றறிய முடியாமல் மூச்சு வாங்கும்!
எளிமைக்கு நேருகின்ற முடிவைப் பார்க்க
ஏமாற்றும் எத்தரெல்லாம் காத்தி ருப்பார்!

நாய்களுக்குப் போடுகின்ற பிஸ்கட் துண்டில்
நான்கிலொரு பங்கேனும் ஏழைப் பிள்ளை
வாய்களுக்குப் போடுங்கள்! எளிமை உங்கள்
வாசலுக்கே வணங்கிவந்து நிற்கும்! அன்புத்
தாய்களைப்போல் , ஆகிவிட்டால் செல்வம் கொண்டோர்
தரைமீது நடக்கின்ற வானம் ஆவார்!
பேய்களைப்போல் இருப்போரே! உம்மை எல்லாம்
பேசாமல் விடுகின்றேன்! திருந்திக் கொள்வீர்!

பசிப்பவர்க்கு விழா எடுத்தே சோற ளித்தோம்.
பக்கத்துத் தெருவுக்குப் போனா லும்நாம்
இசைப்பதற்கு மேளங்கள் வைத்தோம்! வானம்
இறங்கிவர எதிர்பார்த்தோம்! ஊரில் ஏழை
வசிப்பதற்கோர் இடமளித்தால் கூட இந்த
வையமெலாம் பறையடித்தோம்! வேட்டு வைத்தோம்!
அசைக்கின்ற தொட்டிலுக்கும் ஊரைக் கூட்டி
ஆட்டிடவே தாய்கூட ஆசைப்பட்டாள்!

விமானத்தின் இறக்கைகளில் எளிமைக் காக
விளம்பரங்கள் எழுதிவைத்துக் காத்தி ருந்தோம்!
அமாவாசை நேரத்தில் நிலவைப் பார்க்க

அடம்பிடிக்கும் குழந்தையென ஆகி விட்டோம்!
சமாதானம் செய்துகொள்ள நினைத்தோம்! ஆனால்
சண்டைக்கே தயார்செய்து செலவ ழித்தோம்!
நமக்குள்ள ஆடம்பரத்தால் வேற்று
நாடெல்லாம் செழிப்பதற்கே உழைத்து வந்தோம்!

எளிமையைத்தான் பாடுகின்றேன்! ஆனால் வாடும்
எளியவன்தான் எளிமையினைக் காட்டு கின்றான்!
எளிமையினை ஏற்பதுபோல் நடக்கின் றோம் நாம்.
எதையும்நாம் பேச்சில்தான் காட்டு கின்றோம்!
வலியவன்தன் அடையாளம் தெரிவ தற்கே
வையத்தில் எளியவனை விட்டு வைத்தான்!
எளியவனை வலியவனின் தேவைக் காக
இருட்டினிலே வாடவைத்தல் எளிமை இல்லை!

புத்தரன்று காட்டுக்குப் போன போது
புவியிலுள்ளோர் எளிமையினைப் பார்த்தி ருந்தார்!
சத்தமின்றி ஏசுபிரான் பிறந்த போது
தரணிமுற்றும் எளிமையினைப் பார்த்தி ருந்தார்!
சித்தமெல்லாம் தடுமாறிப் போன தாலே
சிறப்பளிக்கும் எளிமையினை நழுவ விட்டோம்!
எத்தனையோ பேர்களிடம் கடனை வாங்கி
இந்நாட்டைக் கடனாளி ஆக்கி விட்டோம்!

சித்திரையில் நாளைக்குப் பிறப்போ ருக்கும்
இன்றைக்கே கடன்சுமைகள் காத்தி ருக்கும்!
சத்தியமாய் எளிமையினை வளர்த்தி ருந்தால்
தாழ்ந்தநிலை நமக்கெல்லாம் வருவ துண்டா?
சித்திரத்தில் இருக்கும் பூ நம்மைப் பார்த்துச்
சிரித்தாலும் மணப்பதில்லை! எளிமை இன்னும்
புத்தகத்தில் இருந்துவந்தால் மெலிந்தி ருக்கும்
புல்கூட நம்மையினி மதித்தி டாது!

எளியஉடை என்றால் நாம் மதிக்கின் றோமா?
எளிமையுடன் இருப்பவனை அழைக்கின் றோமா?
எளியமுறை திருமணத்தை ஏற்கின் றோமா?
எளிமையுடன் இல்லத்தை அமைக்கின் றோமா?
எளியசெயல் செய்பவரை நினைக்கின் றோமா?
எளிமையிலே மகிழ்ச்சியுடன் இருக்கின் றோமா?
எளிமையிலே நம்பிக்கை வைத்து நாட்டில்
எளியமக்கள் முகம்பார்க்கும் நாளே பொன்னாள்!

எளிமையுடன் வள்ளுவரின் குறட்பா இந்த
வையமெலாம் ஆளுவதைக் கண்டோம்! பாரில்
எளிமைக்கோர் இலக்கணத்தை வடலூர் வள்ளல்
இராமலிங்கம் வகுத்துவைத்தார்! காந்தி அண்ணல்
எளிமைக்கோர் வாழ்க்கையினை வாழ்ந்து சென்றார்.
எளிமைக்குப் பேரறிஞர் அண்ணா வந்தார்!
எளிமைக்கும் எளிமைதந்தார்! நாட்டு மக்கள்
எல்லோர்க்கும் இனிமைதந்தார்! மறக்க லாமா?

ஏமாற்ற எண்ணாத வரைக்கும் இந்த
எளிமைநிலை வாழ்க்கைக்கு மேன்மை காட்டும்!
ஏமாற்ற எண்ணுகின்ற மனிதன் நல்ல
எளிமையினைத் தன்காலில் போட்டுத் தேய்ப்பான்!
பூமாலை ஜிகினாக்கள் சிரிப்பை நம்பிப்
பொன்வண்டு போய்விட்டால் பரிதா பந்தான்!
ஏமாற்ற எண்ணாத மனிதர் ஆவோம்
எளிமைக்குப் பெருமையினை நாட்டில் சேர்ப்போம்!

**☆ எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக்**
**கவியரங்கில் பாடியது.**

*With best compliments from*

# SRI KANDHAN EXPORTS

*Exporters of Floor Coverings and Made Ups*

**60, Srinivasapuram**

**Bhavani - 638 301**

Phones: 30352, 30373, 21373,

Fact: 61854 Res: 30480

Telex: 8502 208 DARI IN

Fax: 91-4256 30233

**With Best Compliments from**

# SRI SARADHA TEXTILE PROCESSORS (P) LTD.,

707/1, Urachikottai, BHAVANI - 638 302

## A Leading Textiles Processor in...

- COTTON FABRICS
- MAN-MADE FABRICS
- VISCOSE
- HOSIERY
- EXPORT-GARMENTS
- TERRY - TOWELS
- SPECIALIST IN CREPE/CRINKLING

Phone: 20219, 20900 Fax: 04256, 20900

Telex: 08502 - 218 SARA IN

# கண்தானம் செய்திடுவீர் !

புலவர் செ. வரதராசன்

அன்பின் பெரியீர்! அன்னையரே!
அறிவார் செய்தி கேளுங்கள்!
கண்ணே யார்க்கும் வழிகாட்டி
கருவிழி கண்ணின் முதலாகும்

கண்ணில் கண்புரை வளர்ந்துவரின்,
காணும் பார்வை மறைந்துவரும்
கண்புரை அதனை நீக்கிவிட்டுக்
கண்ணுள் 'லென்சு'ம் பொருத்திடலாம்.

வண்ணம் வடிவம் கூடிடவே
வாய்க்கும் சட்டம் எழில்கூட்டும்
கண்ணா டியையும் அணிந்திடலாம்
கவினுறு காட்சி பெற்றிடலாம்.

கண்ணுள் கருவிழி நோயுற்றோ,
கடுமை யாக அடிபட்டோ,
கண்ணின் தன்மை இழந்துவிடின்,
காணும் ஆற்றல் மறைந்துவிடும்.

கண்ணை இழந்து யாவருமே
காலம் முடிந்தே இறந்தோரின்
கண்ணின் கருவிழி பொருத்துவதால்
காணும் கண்ணொளி பெற்றிடலாம்!

கண்ணை மூடி இறந்தபின்னே
கண்ணை உடலோ டெரித்திடுவீர்!
மண்ணில் போட்டுப் புதைத்திடுவீர்!
கண்ணை அழிப்பதால் என்னபயன்?

என்றும் மரணம் இல்லாத
ஏற்ற கண்ணை மற்றவர்க்கு
நன்றே கொடுத்து உதவிடுங்கள்!
நல்லொளி பெறவே செய்திடுங்கள்!

கண்ணைக் கொடுத்து மற்றவரின்
கண்ணாய் இருந்து வாழுங்கள்!
கண்கொடை செய்து மகிழுங்கள்!
கடமை யாற்றிச் சிறந்திடுங்கள்!

# அருகிவரும் காங்கேயம் காளை இனம்

காங்கேயம் என்றவுடன் யாவருக்கும் காங்கேயக் காளையின் உருவம் தான் மனக்கண் முன் வரும். அந்த அளவுக்கு வலுவான உருவமும், திடமான நீண்ட கொம்புகளும், பொதுவாக கரிய மற்றும் சாம்பல் நிறமும் கொண்டு, வீரத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் காங்கேயக் காளைகளின் இனம் தற்போது அருகிவருவது எல்லோருக்கும் ஒரு கசப்பான செய்தியாகும். என்று காங்கேயத்திலுள்ள கிராமவாசிகள் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது, அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களின் மூலம் கலப்பினக் கன்று உற்பத்தி கால்நடை மருத்துவ நிபுணர்களால் செயல் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் தொடர்ச்சியாக நாட்டுப்புறத்திலுள்ள சாதாரண பசு இனங்களில் உயர்ரக பால் உற்பத்தி தரும் கலப்பினச் சேர்க்கையின் மூலம் புதிய இனங்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். இவ்வகை அறிவியல் செயலாக்கம் பெரியார் மாவட்டத்தில் பெரிதும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக காங்கேயம் பகுதியிலுள்ள காங்கேயம் இனப் பசுக்களிலும், வெளி நாட்டிலிருந்து தருவிக்கப் பட்ட உயர்ரக இனத்தின் கலப்பின உற்பத்தி மூலம் புதிய இனப் பசுகன்றுகள் தோற்றுவிக்கப் படுகின்றன. இவைகள் காங்கேய இனத்திற்கே உரிய சிறப்புக் கூறுகளை அவ்வளவாகப் பெற்றிருப்பதில்லை. இதனால் நாளடைவில் காங்கேய இனச் சிறப்புகள் அருகி, கலப்பினக் கன்றுகளே பெருகி வருகின்ற சூழ்நிலையைக் கண்டு, விவசாயிகள் அச்சம் தெரிவித்தார்கள். அவர்களின் ஐயத்தை கால்நடை நிபுணர்களிடம் சுட்டிக்காட்டியபோது, அவர்களும் விவசாயி களின் நியாயமான ஐயப்பாட்டை ஒத்துக் கொண்டார்கள். காங்கேயம் இனத்தின் தனிப் பண்புகளைப் பாதுகாக்க ரூ.10 இலட்சம் செலவில் தனிப் பண்ணைகள் அமைத்து, காக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்கள்.

**AMUDHAM**
**FOOD PRODUCTS (P) LTD**

**Factory:**

266/1, to 7, Coimbatore Main Road,
OLAPALAYAM (P.O.)
PERUNDURAI - 638 052
Phone: Off: 20474, Factory: 20401, 20643

**Resi:**

51-A, Hospital Road
PERUNDURAI-638 052

**GANGA**
**FOOD PRODUCTS (P) LTD**

**Factory:**

101/3, Muthukkalimadai Perivu,
P. Vellapalayam P.O.
GOBICHETTIPALAYAM - 638 476
Phone: Off: 20474, Factory: 23484

**Office:**

Bhavani Main Road
PERUNDURAI-638 052

நமது நகரில் நவீன வசதிகளுடன் சிறந்த ஒலி ஒளி அமைப்புகளுடன்
தரமான திரைப்படங்களைத் திரையிடும் திரையரங்கங்கள்.
மக்களின் மனதில் ஓர் மகத்தான நிறைவைக் கொடுக்கும்
உங்கள் திரையரங்கங்கள்

போன் 7070

**☆ ஸ்ரீதேவி தியேட்டர்ஸ் ☆**

(வெஸ்ட்ரக்ஸ் 4 - டிராக் ஸ்டீரியோ சவுண்ட் சிஸ்டம்)

புஞ்சைப் புளியம்பட்டி, சத்தி வட்டம்

போன்: 7053

**☆ ஸ்ரீராம் தியேட்டர் ☆**

G.K. 19, டொஸானிக் சவுண்ட் சிஸ்டம்

புஞ்சைப் புளியம்பட்டி, சத்தி வட்டம்

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம்

# குழந்தைத் தொழிலாளர் மீட்பு: யுனிசெப் குழுவினர் பார்வையிட்டனர்

**வ**ட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் பீடித் தொழிலிலிருந்து குழந்தைத் தொழிலாளர்களை விடுவித்து பள்ளிக்கு அனுப்பி கல்வியளிக்கும் பணியினை மாவட்ட நிர்வாகம் மிகவும் தீவிரமாக நடத்தி கண்காணித்து வருகிறது. இதன்படி, இம்மாவட்டத்தில் பீடித் தொழிலில் அடகு வைக்கப்பட்ட குழந்தைகளில் *1,453* குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்பட்டு இவர்களுக்காகவே அமைக்கப்பட்டுள்ள *48* சிறப்பு மையங்களில் கல்வி கற்கச் சேர்க்கப்பட்டுள்ளார்கள். இவர்களது நிலையினை அவ்வப்போது மாவட்ட நிர்வாகம் கண்காணிக்க தகுந்த தொடர் நடவடிக்கையினை எடுத்து வருகிறது. இத்திட்டத்திற்கு யுனிசெப் நிறுவனமும் தாராளமாக நிதியுதவி வழங்கி வருகிறது.

யுனிசெப் நிதியுதவியுடன் இந்தியாவில் அமல் செய்யப்படும் திட்டங்களில் ஒன்றான மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களின் மறுவாழ்வுத் திட்டப்பணிகளைப் பார்வையிட இங்கிலாந்திலுள்ள கென்ட் மாநிலத்தின் இளவரசி கேதரின் மேரிலூசிவின்சர் தலைமையில் *21* பேர் அடங்கிய வெளிநாட்டுக் குழுவினர் வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் காட்பாடிக்கு அருகில் உள்ள ஜாப்ராபேட்டைப் பகுதிக்கு வந்திருந்தனர்.

தமிழ்நாடு அரசின் சமூகநலத் துறைச் செயலாளர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு எச்.எம். பாண்டே, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ம.ப. விஜயகுமார், இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் திரு நா. முருகானந்தம், இ.ஆ.ப., திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., ஆகியோர் உடன் சென்றார்கள்.

ஜாப்ராப்பேட்டையிலுள்ள பீடித் தொழிலிலிருந்து இளம் சிறார் மீட்கப்பட்டு கல்வி கற்றுவரும் குழந்தைகள் மையத்தினை இக்குழுவினர் பார்வையிட்டு அங்கு பயின்றுவரும் குழந்தைகளின் கல்வித் தரத்தைச் சில கணக்குகள் கொடுத்து சோதித்து அறிந்தார்கள். இப்பணியினைக் கண்காணித்து நல்லமுறையில் வழிநடத்திச் செல்லும் மாவட்ட நிர்வாகத்தினைப் பாராட்டினார்கள்.

குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தினை வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்திகரமான முறையில் நடைமுறைப்படுத்தி வருவதாகவும் குறிப்பிட்டார்கள். இந்தியாவில் குழந்தை நலம் தொடர்பான திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதியினை வழங்க யுனிசெப் நிறுவனம் தயாராக உள்ளதாகவும் குறிப்பிட்டார்கள். இத்திட்டம் தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திற்குத் தேவையான உதவிகளை 'யுனிசெப்' நிறுவனம் மாவட்ட ஆட்சியருடன் கலந்து ஆலோசித்து வழங்கும் என்றும் தெரிவித்தார்கள்.

பீடித் தொழிலிலிருந்து மீட்கப்பட்டு முறைசாரா கல்வி மையத்தில் கல்வி கற்றுவரும் தேவகுமார், பழனி, பாக்கியலட்சுமி, சித்ரா மற்றும் இம்மையத்தில் கல்வி கற்றுவரும் சிறுவர், சிறுமிகளைச் சந்தித்து அவர்களது குடும்ப நிலையையும், தற்போது கல்வி பயிலுவதால் ஏற்பட்டுள்ள மாற்றத்தையும் கேட்டறிந்தார்கள். குழந்தைத் தொழிலாளர்களை அடமானத்திலிருந்து மீட்டதோடு அவர்களின் பெற்றோர்களுக்கு நிரந்தர வருவாய் அளிக்க மாவட்ட நிர்வாகம் மூலம் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடனுதவி வழங்கியிருந்த கறவை மாடுகள்,



வண்டி மாடுகள் போன்ற வற்றைப் பார்வையிட்டு வாழ்க் கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுமாறும், மீண்டும் குழந்தைகளை வேலைக்கு அனுப்பாமல் இருக்க அறிவுரை யும் கூறினார்கள்.

பின்னர் திருவலம் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு இக் குழுவினர் சென்று 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் செயல்படுத்தப்படும் குழந்தை மற்றும் தாய்மார்கள் பாதுகாப்புத் திட்டம் செயல்படுவதைப் பார்வையிட்டு சுகாதாரம் குறித்து தாய்மார்களுக்குத் தெரி விப்பதைக் குறித்துக் கேட்டறிந் தார்கள். பின்னர், வாலாஜா மருத்துவமனையில் 'யுனிசெப்' நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் குழந்தைகள் பிரி வையும், கர்ப்பிணிப் பெண் களுக்கு வழிகாட்டும் பிரிவையும் சென்று பார்வையிட்டனர்.

**மேலோகத்தில் ஒரு காலும், பூலோகத்தில் ஒரு காலும் வைத்துக்கொண்டு மோட்ச லோகத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கும் பெரியோர் களிடத்தில் எனக்கு வேலை யில்லை. அவர்களிடத்தில் எனக்கு நம்பிக்கையும் இல்லை. பரிசுத்த உள்ளமுடைய வாலிபர் களைத்தான் நம்பியிருக்கிறேன். அவர்கள்தான் என் மனதைக் கொள்ளை கொண்டவர்கள்.**

- தந்தை பெரியார்

இம்மாவட்டத்தில் குழந்தைத் தொழிலிலிருந்து விடுபட்டு முறைசாராக் கல்வி மையத்தில் கல்வி பயிலும், சிறுவர், சிறுமி களின் நல்வாழ்விற்கு அரசு எடுக்கும் முயற்சிகளை வெளி நாட்டுக் குழுவினர் பாராட்டிச் சென்றது. வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்திற்கு மட்டுமல்லாது நமது மாநிலத் திற்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பெருமை சேர்ப்பதாகும்.

*With best compliments from*

TVS XL
TVS XL ELECTRONIC
TVS CHAMP ELECTRONIC
TVS SUPER CHAMP
TVS SCOOTY

SUZUKI MAX 100
SUZUKI MAX 100 R
SUZUKI SAMURAI
SUZUKI SHOGUN

**SALES * SERVICE * SPARES**

# LOTUS AGENCY

16, SATHY ROAD, ERODE-3 Phone: 223331, 223332

104A, PARK ROAD, ERODE-3 Phone: 213713, 217733

**Dealer: TVS SUZUKI MOPEDS & MOTOR CYCLES**

'தமிழரசு' வெளியிடும்

பெரியார் மாவட்டச் சிறப்பிதழ் சிறக்க

இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

## செங்குந்தர் கல்விக் கழகம்

## செங்குந்தர் மேல்நிலைப்பள்ளி

## செங்குந்தர் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி

இரத்னா கல்வி நிலையம்

ஈரோடு

தொடக்கம்: 24.8.1958

தொலைபேசி எண்: 30426

அஞ்சல் பெட்டி எண்: 71

தந்தி "ECOBANK"

# எலவமலை தொடக்க வேளாண்மைக்கூட்டுறவு வங்கி லிட்., நெ.கெ.1161.,

காளிங்கராயன்பாளையம் புதூர், பவானி - 638 301

ஈரோடு தாலுக்கா, பெரியார் மாவட்டம்

☆ மாநிலத்தில் சிறந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கான முதல் பரிசைத் தொடர்ந்து ஏழு ஆண்டுகள் பெற்றுள்ளது இவ்வங்கி.

**30.9.95 ல்**

**பங்குத் தொகை ரூ.47.69 இலட்சம்**

**பெற்றுள்ள வைப்புகள் ரூ.1380.46 இலட்சம்**

**வழங்கியுள்ள கடன்கள் ரூ.1342.12 இலட்சம்**

பயிர்க் கடன்கள், மத்திய, நீண்ட காலக் கடன்கள் வழங்கப்படுகிறது.

குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களுக்கு ரூ.2 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

நகைக் கடன் நபருக்கு ரூ.40,000 வரை, நுகர்பொருள் கடன் ரூ.10,000 வரை வழங்கப்படுகிறது.

வாகனக் கடன்கள் (லாரி, பஸ், வேன்) ரூ.10 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

வைப்புகளுக்குக் கூடுதலான வட்டி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு முழுவதும் டிராப்ட்கள் வழங்கப்படுகிறது.


பாதுகாப்புப் பெட்டக வசதி நிறைந்த சேவை.

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம்.

குறைந்த விலையில் உரம், பூச்சி மருந்துகள் விற்பனை.

**கே. கருப்பண்ணன் (மணி)**
செயலாளர்

**மு. குமாரசாமி**
தனி அலுவலர்



# ... செய்திகள் ... செய்திகள் ... செய்திகள் ...

**❖ என்றுமில்லாத இலாபம் ! ❖**

திருச்சியில் உள்ள பாரத மிகுமின் நிறுவனத்தின் (BHEL) இலாபம் 1995-96-ஆம் நிதியாண்டில், முன் எப்போதும் இல்லாத வகையில் ரூ.120 கோடியாக உயர்ந்திருக்கிறது.

**❖ பிள்ளையால் தண்டனை ! ❖**

தமது பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பாத பெற்றோர்களுக்குத் தண்டனை விதிப்பது என்று இமாசலப்பிரதேச அரசு முடிவு செய்திருக்கிறது!

**பைசாக்கள் செல்லாதா ?**

5 பைசா நாணயம் தயாரிப்பைக் கைவிடப் போவதாக மத்திய நிதியமைச்சகம் அறிவித்தாலும் அறிவித்தது, மக்களும் குறிப்பாக வியாபாரிகளும் அதை இப்போதே வெறுக்கத் தொடங்கிவிட்டார்கள். ஆனால், 5 பைசா, 10 பைசா, 20 பைசா ஆகிய சில்லறை நாணயங்கள் செல்லுபடியாகும் என்று ரிசர்வ் வங்கி அறிவித்திருக்கிறது.

**❖ துறைமுகத்தின் சாதனை ! ❖**

1995-96-ஆம் நிதியாண்டில், சென்னைத் துறைமுகம் சரக்குகளைக் கையாண்டதில் ரூ.325.22 கோடி வருமானம் பெற்றிருக்கிறது. சுமார் 3.07 கோடி டன் சரக்குகளை ஏற்றுமதி இறக்குமதி செய்து சாதனை புரிந்திருக்கிறது.

**❖ மாணவனுக்கு விருது ! ❖**

குடியரசு நாளையொட்டி டில்லியில் நடைபெற்ற தேசிய மாணவர் படை (என்.சி.சி.)யினருக்கான போட்டிகளில் பள்ளிகளுக்கான பிரிவில் சென்னை மாணவன் சித்தார்த் இராமலிங்கம் (13) தங்கப்பதக்கம் வென்றான். 9வது படிக்கும் டி.ஏ.வி. பள்ளி மாணவனான இவனுக்கு பிரதமர் பேடன் (Baton) விருதும், சிறந்த சீருடை அணிந்ததற்கான செரிபிளாசம் விருதும் கூட கிடைத்திருக்கிறது.

**❖ தலைகீழ் நடை ! ❖**

பழனி மலைப்படிகளில், கைகளை ஊன்றித் தலை கீழாக நடந்து வந்து, திரு என். கருணாகரன் (22) என்ற இளைஞர் சாதனை புரிந்திருக்கிறார். மதுரையில் உள்ள பசும்பொன் நகரைச் சேர்ந்தவர் இவர்.

**❖ புகை உயிருக்குப் பகை ! ❖**

இந்தியாவில் உள்ள ஆண்களில் 60 சதவிகிதம் பேரும், பெண்களில் 3 சதவிகிதம் பேரும் புகைப்பிடிக்கும்

> சிரிக்கத் தெரியாதவர்கள் விலங்குகளுக்கு இணை யாவார்கள்.
>
> —கலைவாணர் என்.எஸ்.கே.

வழக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். இந்திய இதய நோய்ச் சிகிச்சை மையம் என்ற அமைப்பு இதைத் தெரிவித்திருக்கிறது.

❖ விமான நிலையத் தடை! ❖

சென்னையில் உள்ள அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் இனி திங்கள், புதன், சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையாளர்கள் இரவு நேரத்தில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது.

❖ வெளிநாடு போகாதீர்! ❖

வேலை தேடி ஆசியா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் செல்வோர், இனி தயங்கக் கூடும். ஏனென்றால், அங்கே அளிக்கப்படும் சம்பளத் தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது இப்போது.

❖ அஞ்சல் பிரிப்பில் சாதனை! ❖

சென்னை விமான அஞ்சல் பிரிப்பகப் பிரிவு ஊழியர்கள் ஜெ. உஷா, எஸ்.என். லட்சுமி, எம்.எஸ். கிரிஜா ஆகியோருக்கு 1995 ஆம் ஆண்டுக்கான சிறந்த 'அஞ்சல் பிரிப்பக உதவியாளர் விருது' வழங்கப்பட்டிருக்கிறது.

❖ மிகப் பெரிய எலி! ❖


சீனாவில், சுமார் 6 கிலோ எடையுள்ள மிகப் பெரிய எலி ஒன்றைப் பிடித்திருக்கிறார்கள்; 50 செ.மீ. நீளமுள்ள அந்த எலியின் வால் மட்டும் 30 செ.மீ. இருக்கிறதாம்.

❖ தங்கத் தாமரை! ❖

ஆண்டுதோறும் சிறந்த திரைப்படக் கலைஞர்களாகத் தேர்வு பெறுவோருக்கு வழங்கப்படும் தங்கத் தாமரை விருதில் உள்ள தங்கத்தின் எடை 48 கிராம். 6 காரட் தங்கத்தில் தயாரிக்கப்பட்ட இதில் தங்கத்தின் பங்கு 24.5 பங்கும், தாமிரத்தின் பங்கு 75.5 பங்கும் இருக்கும். அதற்கு முலாம் பூச 0.02 தங்கம் பயன்படுகிறது. ஆக, விருதின் மொத்த எடை 195 கிராம்.

❖ கம்ப்யூட்டர் மோசடிகள் ❖

1991 ஆம் ஆண்டில், கம்ப்யூட்டர் மற்றும் நெட்வொர்க்குகளைத் தவறாகப் பயன்படுத்தியதால் ஏற்பட்ட



இழப்பு 25,000 பிரிட்டிஷ் பவுண்டுகள் (ஒரு பவுண்டு சுமார் 52 ரூபாய்) என்று ஒரு புள்ளி விவரக்கணக்கு தெரிவிக்கிறது. இண்டர்நெட் போன்ற தொழில்நுட்ப விந்தைகள் ஒருபுறம் நிகழ்ந்தாலும், அதன்மூலம் சில மோசடிகளும் நடக்கின்றன என்றால் வேதனைக்குரிய செய்திதானே?

❖ கல்வி நிலைய நூற்றாண்டு ❖

எல்.எஸ்.இ. எனப்படும் இலண்டன் பொருளாதார அரசியல் விஞ்ஞான மையம் உலகப் புகழ்பெற்ற கல்வி ஆராய்ச்சி நிலையமாகும். இப்போது அந்நிலையம் தமது நூற்றாண்டு விழாவை (1895-1995) கொண்டாடிக் கொண்டிருக்கிறது.

❖ புதுமைக்கு விருது ❖

மதுரை வானொலி நிலையம் ஒலிபரப்பிய கிராம விளையாட்டுகளில் தமிழ்ப் பெண்டிர் என்கிற நிகழ்ச்சிக்குப் புதுமை நிகழ்ச்சிகளுக்கான 'ஆகாஷ்வாணி விருது' புதுடெல்லியில் வழங்கப்பட்டது.

❖ சாஃப்ட்வேர் ஏற்றுமதி ❖

நடப்பு நிதியாண்டில் மின்னணு

---

☆ *ஏதோ ஒரு வழியில் நாம் மக்களுக்குப் பகுத்தறிவை உண்டாக்கி விட்டோமானால், பிறகு அவர்கள் எல்லாவற்றையும் ஒரே கண்ணாடி கொண்டு பார்த்து, உண்மையை உணரக் கூடியவர்கள் ஆகி விடுகிறார்கள்.*

*—தந்தை பெரியார்*

சாதனங்கள் கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர், அவை தொடர்பான மற்ற சேவைகள் மூலம் அந்நியச் செலாவணியாக இந்தியா ரூ.5,000 கோடி பெறக்கூடும் என்று மின்னணு கம்ப்யூட்டர் சாஃப்ட்வேர் கவுன்சில் கூறுகிறது.

❖ இலங்கையின் சாதனை ❖

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் கடைசி லீக் ஆட்டத்தில் இலங்கை அணி புதிய உலக சாதனை நிகழ்த்தியது; கென்யா அணிக்கெதிராகக் கண்டியில் நடந்த ஆட்டத்தில் இலங்கை 397 ரன் குவித்து முந்தைய சாதனையை முறியடித்தது. 1987 இல் இலங்கை அணிக்கெதிரான ஆட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் அணி 359 ரன் எடுத்ததுதான் இதுவரை சாதனை எனப்பட்டு வந்தது.

❖ அமெரிக்கப் புதிய மையம் ❖

சென்னை விமான நிலையத்தினருகே, அமெரிக்க நிறுவனத்தின் தகவல் தொழில் நுட்ப மையம் அமையவிருக்கிறது. 'டெக்சாஸ் இன்ஸ்ட்ருமென்ட்ஸ்' என்கிற அமெரிக்க நிறுவனம் மூலம் இம் மையம் அமைக்கப்படும்.

❖ இராணுவத்தில் பெண்கள் ❖

தொடர்ந்து இராணுவத்திலேயே பணியாற்ற விரும்பிச் சேர்ந்திருக்கிறார்கள் தமிழ்நாட்டு மகளிர் இருவர். ஒருவர், மினி ஜான்- ஆவடியைச் சேர்ந்தவர்; இன்னொருவர், அருள்மொழி- புதுவையைச் சேர்ந்தவர். இருவ்ரும் சென்னை பரங்கிமலையில் உள்ள இராணுவப் பயிற்சி அகாடமியில் பயிற்சி பெற்றவர்கள் ஆவர்.

❖ அதிக ரன் எடுத்தவர்கள் ❖

ஐக்கிய அரபுக் குடியரசுக்கு எதிராக ராவல்பிண்டியில் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாப்பிரிக்காவின் காரிகிரிஸ்டன் அடித்த 188 ரன்கள்தான் இந்த உலகக் கோப்பை கிரிக்கெட்டில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் ஒருவரே அடித்த அதிகபட்ச ரன்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளது. இந்தியாவில் சச்சின் டெண்டுல்கர், ஆஸ்திரேலியாவின் மார்க் வாக் ஆகிய இருவரும் இரட்டைச் சதம் அடித்த சாதனையாளர்களாவர்.

❖ நேதாஜி மனைவி மறைவு ❖

எப்படி இறந்தார் என்று இதுவரை சரியாகக் கண்டுபிடிக்கப்படாத இந்திய விடுதலைப் போராட்ட வீரர் நேதாஜியின் மனைவி ஃபிராவ் எமிலி ஷெங்கால் போஸ், ஜெர்மனியில் 12.3.96இல் மறைந்தார். விடுதலைப் போரில் இவரும் கணவருக்கு ஆதரவாக இருந்து போராடியிருக்கிறார்.

❖ இந்திய இளம் விஞ்ஞானி ❖

அமெரிக்காவில் உள்ள மிக்சிகன் நகரில் படிக்கும் இந்திய மாணவர் சந்தன் கோபால் ரெட்டி, சென்ற ஆண்டின் இளம் விஞ்ஞானியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வாஷிங்டனில் இவருக்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

—தொகுப்பு பி.எல்.ஆர்.

## அட்டைப்பட விளக்கம்


**முதலாம் அட்டை:**

வண்ண ஓவியம்:
ஏ. சுரேஷ்
அரசினர் கட்டடக்கலை மற்றும் சிற்பக் கல்லூரி
மாமல்லபுரம்.

**இரண்டாம் அட்டை:**

விந்தை நிகழ்த்தும் கம்ப்யூட்டர்

**நான்காம் அட்டை:**




1 - காஞ்சி கைலாயநாதர் திருக்கோயில் சிற்பம்
2, 3 - உதகைப் பூங்கா
4 - குற்றாலப் பேரருவி
5 - மாமல்லபுரக் கலைக்கோயில்
6 - சுசீந்திரம் திருக்கோயில்

படங்கள் உதவி: சுற்றுலாத் துறை

With Best Compliments From

HERO
HONDA

# SRI SENTHIL AUTOS

*Authorised Dealer for Hero Honda*

**63, Perundurai Road,**

**ERODE - 638 011**

**Phone: 22 00 80 & 22 00 90**

With Best Compliments From

# ROYAL AGENCY

*Dealers in*

*TVS MOPEDS & SUZUKI MOTOR CYCLES*

E-855, BROUGH ROAD

ERODE-1

**Phone: 220266, 222466**

# இது ஒரு கம்ப்யூட்டர் காலம்!




● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

உலகமே எதிர்பார்க்கும் ஒரு வரலாற்று நிகழ்ச்சி இன்னும் சில நொடிகளில் நடந்தேறப் போகிறது. அமெரிக்க நாட்டின் தலைவர் நிக்சன் முதல், பூமி உருண்டைப் புள்ளியாகத் தெரியும் கிராமங்களில் வாழும் சாதாரணப் பாமர மக்கள் வரை அந்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். திட்ட மிட்டபடி பூச்சிக்கூடு அப்போலோ 11 ராக்கெட்டிலிருந்து பிரிந்து, வரலாற்று நிகழ்ச்சியை இன்னும் சில நொடிகளில் நிகழ்த்த சந்திரனை நோக்கி மெல்ல இறங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தோ! அந்தப் பூச்சிக்கூடு இறங்குமிடம் நினைத்தே பார்க்க முடியாத மிகப் பெரிய பாதாளத்தின் விளிம்போ என்று பார்ப்பவரைக் கதறச் செய்யும் அந்த நிகழ்ச்சி. ஐயோ! தொலைந்தார்களே, கோடிக் கணக்கான பணத்தைச் செலவு செய்து நிகழ்த்தும் இந்தச் சாதனை வேதனையில் முடியப்போகிறதோ, என்று டெக்ஸாஸ் மற்றும் ஹவுஸ்டன் விஞ்ஞானிகள் ஐயமுறுகிறார்கள். அப்போது, ஆபத்தாண்டவனாய், அனாதை இரட்சகனாய் சூப்பர் கம்ப்யூட்டர் எனப்படும் ஓர் ஆற்றல் மிக்க கணிப்பொறியின் நுண்ணிய செயலாக்கத்தை விஞ்ஞானிகள் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எல்லோருடையநம்பிக்கையையும்,வீணடிக்காமல், அந்த வரலாற்றுச் சாதனையை அதாவது நிலவில் முதல் முதல் மனிதன் தனது காலடியை வைத்த அந்தச் சம்பவத்தை எந்தக் குளறுபடியும் இல்லாமல் கோளாறுமில்லாமல் சரியாகச் செய்து முடித்து, அதல பாதாளத்தில் இறங்க எத்தனித்த அந்தப் பூச்சிக்கூட்டினை நிலவில் தரையிரங்கச் செய்த சாதனை அந்தக் கணிப்பொறிக்கு உண்டு, அந்தக் கணிப்பொறியின் அளப்பரிய ஆற்றலால்தான் இந்த மிகப்பெரிய சாதனை செய்யப் பட்டது என்றால், அது இம்மியளவும் ஐயமில்லை.

இன்றைக்கு, கணிப்பொறி இல்லையென்றால் அமெரிக்கா விலுள்ள அனைத்து வங்கிகளும் தங்களின் வர்த்தகத்தை நடத்த முடியாமல் முடங்கிவிடும் என்கிற சூழ்நிலை. அமெரிக்காவில் மட்டுமல்ல, ஏன் இந்தியாவில் கூட அப்படியொரு சூழ்நிலை வருகிற நேரம் தொலைவிலில்லை என்று கூறும் அளவுக்கு கணிப் பொறிகளின் ஆட்சி எல்லாத் துறைகளிலும் நீக்கமற நிலைப் பெற்றுள்ளது என்றால் அது மிகையல்ல.

வளர்ந்து வரும் அறிவியலும், தொழில்நுட்பமும் மனிதனுடைய வாழ்க்கையை மேம்படுத்து வதோடு மானுடத்துக்குப் பல வசதிகளையும் செய்து தருகிறது கணிப்பொறி. வானவியல் ஆகட்டும், அணுசக்தித் துறையா கட்டும், அல்லது அன்றாடக் குடும்பப் பணிகளாகட்டும், இப்படி எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் அதில் கணிப்பொறியின் பங்கு தவிர்க்க முடியாததாகும். கணிப்பொறி இல்லையேல் உலகமே தனித்து இயங்காதோ என்கிற ஒரு விஞ்ஞான வீச்சு மாட்சிமை பொருந்தி, ஆட்சி செலுத்துகிற சூழலை நாம் காண்கிறோம். இப்படி உலகத்தையே தன்னுடைய ஆளுகையின் கீழ் கொண்டு வருகிற வல்லாண்மைமிக்க கணிப்பொறி தோன்றி வளர்ந்து செங்கோலோச்சுகின்ற பரிணா மத்தை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளவேண்டியது அவசிய மாகிறது.

கம்ப்யூட்டர் என்ற இலத்தீன் சொல்லுக்குக் கணக்கிடுதல் என்று பொருள். முதன் முதலில் கணக்குப் போடுவதற்கு மக்கள் தங்களுடைய கை விரல்களைப் பயன்படுத்தினார்கள். டிஜிட் என்ற இலத்தீன் சொல்லுக்கு எண்கள் என்று ஒரு பொருளும், விரல் என்று ஒரு பொருளும் உண்டு.

---

**மனிதர்கள் மீது வைக்கின்ற ஆழமான அன்பே கடவுளின் மீது காட்டுகின்ற உண்மையான அன்பாகும்.**

- பேரறிஞர் அண்ணா

---

முதன் முதலில் கணக்கு போடுவதற்கும், கணக்கை எளிதாக்குவதற்கும், பல்வேறு விதமான கருவிகளைத் தத்தம் அறிவு நிலைக்கேற்ப மக்கள் வடிவமைத்துச் செயல்படுத்தி வந்திருக்கிறார்கள். இன்றைய கணிப்பொறியின் அடிப்படை யாக விளங்கும் எண்களை (Numerals) கண்டுபிடித்தது அரேபி யர்கள் என்று சொன்னாலும் உண்மையில் அவை இந்திய நாட்டிற்குக் குதிரை வணிகம் செய்ய வந்த அரேபிய மக்கள் இந்தியாவில் வழக்கத்திலிருந்த எண்களைத் தங்கள் நாட்டிற்கு எடுத்துச் சென்றார்கள் என்று சொல்லப்படுகின்ற யூகங்களை யும் நாம் ஏற்றுக்கொண்டோ மேயானால் இன்றைய கணிப் பொறியின் முன்னோடிகள் நம் நாட்டவர்தான் என்று சொல்ல முடியும். இதுதவிர எண்களின் அடிப்படையாக விளங்கும் பூஜ்ஜியத்தைக் கண்டுபிடித் தவர்கள் இந்தியர்கள் என்பதால் கணிப்பொறியின் வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் இந்தியர்களே என்றால் அதுவும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வாதமே. இப்படி உலகத்தின் ஒவ்வொரு நாட்டிலும் இது தொடர்பான கண்டுபிடிப்புகளைச் செய்து வந்திருக்கிறார்கள்.

## மணிச்சட்டம் (ABACUS)

கி.மு. 450-இல் சீனாவில் எண்களைக் கூட்டுவதற்கு வசதி யாக மணிச்சட்டம் என்கிற ஒரு கருவியைக் கண்டுபிடித்தார்கள் அந்த மணிச்சட்டம் 20க்கும் மேற்பட்ட எண்களை விரல் விட்டு எண்ண முடியாதபோது அவர்களுக்கு ஒரு தோன்றாத் துணையாக வந்து உதவியது. இதுவே கணிப்பொறியின் அடிப் படையென்றால் அது மிகையல்ல. அடுத்தபடியாக ஜப்பானியர்கள், சீனர்கள் கண்டுபிடித்த மணிச் சட்டத்தில் சில புதுமையை ஏற்படுத்தி, சாரபான் என்ற ஓர் கருவியை வடிவமைத்தார்கள். கிட்டத்தட்ட கி.பி. 17ஆம் நூற்றாண்டு வரை மணிச்சட்டம் போன்ற கருவிகளே அன்றைய கணிப்பொறிகளாகப் பயன் பட்டு வந்தன. பின்னர் ஜான் நேப்பியர் (1614) என்பார் ஓர் புது முறையைக் கண்டுபிடித்தார். அதற்கு லாகரிதம் (Logarithm) என்று பெயர் வைத்தார். எண்களை நீண்ட சதுரங்களில் எழுதி, கூட்டல் பெருக்கல், வகுத்தல்களை எளிமையாக் கினார்.

## பாஸ்கல் கணக்கு எந்திரம்


பிளைஸ் பாஸ்கல் (1642) என்பவர் பற்சக்கரங்களைப் பயன்படுத்தி புதிய கருவி ஒன்றை, கூட்டவும் கழிக்கவும் கண்டுபிடித்தார். இது முந்தைய கருவியிலிருந்து வேறுபட்ட தோடு, விரைவுத் தன்மை

பெற்று அனைவராலும் விரும்பப் பட்டது. ஆனால் பாஸ்கலின் கணக்கு எந்திரம் மிகப்பெரிய இடத்தை அடைத்துக்கொண்ட தோடு, இயக்குவதற்குத் தனி அனுபவம் பெறவேண்டிய சூழ் நிலையும் இருந்தது. அதன் பின்னர் லிபின்ட்ஸ் (1671) என்ற ஜெர்மானியர் பாஸ்கலின் கணக்கு எந்திரத்தில் சில மாற்றங்களைச் செய்து, நேரான பெருக்கலுக்கு உதவி செய்தார். இதனால் நேரம் மிச்சமான தோடு, இயக்குவதற்கு எளிமையும் ஏற்பட்டது.

## ஜக்கார்டு முறை

கி.பி.19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நெசவுத் தொழில் ஐரோப்பிய நாடுகளில் சிறப்புப் பெற்று விளங்கியது. நெசவுத் தொழிலில் புத்தம் புது கலை நயத்தோடு கூடிய வேலைப்பாடு களைச் செய்வதற்காக (Designs) தறிகளில் துளையிடப்பட்ட காகிதங்களைப் பயன்படுத்தி வந்தார்கள். பின்னர் காகிதத் திற்குப் பதில் துளையிடப்பட்ட அட்டைகள் பயன்படுத்தப் பட்டன. இந்த வகைத் தொழில் நுட்பத்தை ஜோசப்மரீ ஜக்கார்டு (1801) என்பார் கண்டுபிடித்து, செயல்படுத்திக்காட்டினார். அந்தத் தொழில் நுட்பமே மனிதனால் முதன் முதலில் எந்திரத்திற்குக் கொடுக்கப்பட்ட முதல் மொழி யாகும். அதாவது எந்திரத்திற்குப் புரியும் வண்ணம் மனிதன் அதற்கு முதன் முறையாகக் கொடுத்த கட்டளையாகும். இதுவே இன்றைய கணிப்பொறி யின் மொழி வளர்ச்சிக்கு இடப்பட்ட (Soft ware) முதல் வித்தாகும். இன்றும் நெசவுத் தொழிலில் ஜக்கார்டு முறை என்கிற ஒரு தொழில் நுட்பம் வழக்கிலுள்ளது.

அதன் பின்னர் சார்லஸ் பாபேஜ் 1792 என்பவர் நெசவுத் தொழிலில் பயன்பட்ட ஜக்கார்டு முறையைப் பின்பற்றி, துளை யிடப்பட்ட அட்டைகள் மூலமாக மனிதனுக்கும் இயந்திரத்திற்கும் இடையே செய்தி பரிமாறிக் கொள்ள முடியும் என்பதைக் கண்டுபிடித்தார்.இதைக்கொண்டு மிகக் கடினமான கணக்குகளைக் கூட இயந்திரங்களைப் பயன் படுத்தி எளிமைப்படுத்தலாம் என்று முதன்முதல் கண்டு பிடித்துச் சொன்னார். இவரே கணிப்பொறியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். பாபேஜ் கண்டுபிடித்த கருவிக்குப் பெயர் வேறுபாட்டு எந்திரம் (Difference Engine) என்று பெயர். இதில் மிகப் பெரிதான 50,000 பற் சக்கரங்கள், அச்சு உருளைகள், நெம்புகோல்கள் போன்றவை பிரம்மாண்டமாக இருந்தன. இது இயங்குவது இன்றுள்ள மிகப் பெரிய தொழிற்சாலையின் பகுதியைப் போல் மிகவும் சுறு



சுறுப்பு நிறைந்து இருக்கும். இருப்பினும் அந்த எந்திரத்தில் செய்திகளைச் சேகரிக்கும் பகுதி, கணக்கிடும் பகுதி என்று இரண்டு பிரிவுகள் இருந்தன. அவ்வெந்திரத்துக்குத் துளை யிடப்பட்ட அட்டைகள் மூலமே செய்திகள் தரப்பட்டன. அதன் பிறகு பாபேஜின் எந்திரத்தில் நிறைய மாற்றங்கள் ஏற்படுத் தியும், லிபின்ட்ஸ் என்பாரின் கண்டுபிடிப்புகளைப் பயன் படுத்தியும் 1820-ஆம் ஆண்டு கால்குலேட்டர் என்ற கருவியை ஹர்மன் ஹாலரித் என்பார் கண்டுபிடித்தார்.

### மார்க் 1


தானாக இயங்குகிற கணிப் பொறியை உலகிலேயே முதன் முதலில் கண்டுபிடித்த பெருமை டாக்டர் ஹோவார்டு அய்க்கண் (1925) என்பாரைச் சாரும். அவர் கண்டுபிடித்த கணிப்பொறிக்கு மார்க்-1 என்று பெயர். கூட்டல் கழித்தல் வகுத்தல் போன்றவை களை விரைவாகவும், எளிமை யாகவும் செய்கின்ற திறமை மார்க்-1 கணிப்பொறிக்கு உண்டு ஆனால், அதற்கு நினைவாற்றல் இல்லை. முன்னரே வழக்கத் திலிருந்த துளையிட்ட அட்டை முறையே அவ்வெந்திரத்திலும், பயன்படுத்தப்பட்டது. எனினும், முதல் கம்ப்யூட்டர் என்கிற பெருமை மார்க்-1-க்கு உண்டு என்றே சொல்லலாம்.

### நினைவாற்றல் (Memory)

இயற்கையால் கண்டெடுக் கப்பட்ட நடமாடும் கம்ப்யூட்டரான மனிதனின் மூளைக்குச் சவால் விடும் இன்றைய அறிவியல் தொழிலநுட்பத்தின் விந்தையாக விளங்குகிற செயற்கை அறிவு (Artificial Intelligence) என்கிற புதிய தொழில்நுட்பத்திற்கு மூலாதாரமாக விளங்குகிற நினைவாற்றல் (Memory)என்னும் சிறப்புக்கூறினை எந்திரத்தில் இணைத்து, தனித்தன்மை வாய்ந்த கணிப்பொறி கண்டவர் டாக்டர் ஜான் பான் நாய்மன் (1945) என்பவராவார். இவரது கண்டுபிடிப்புக்குப் பின்னரே கணிப்பொறி வளர்ச்சியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று கூறலாம்.

### ஈனியாக்

டாக்டர் நாய்மன் கண்டு பிடித்த கணிப்பொறியில் சில மாற்றங்களை ஏற்படுத்தி 1946-ஆம் ஆண்டு ஈனியாக் (Electronic Numerical Integraged and Calculator) என்ற கணிப் பொறியே முதன் முதலில் பொது வாழ்க்கைக்குப் பயன் படுத்தப்பட்டது. அமெரிக்கா விலுள்ள பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த டாக்டர் ஜான் மாக்லே என்ப வரும், அவரது மாணவரான பிரெஸ்பர் எக்கார்டு என்ப வரும் இணைந்து இந்தக் கணிப்பொறியை உருவாக் கினார்கள். இரண்டாம் உலகப் போர் நேரமாதலின் இவ்வகைக் கணிப்பொறிகள் இராணுவப் பீரங்கிக் குண்டுகளின் பாதையை கணக்கிடுவதற்காகப் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இதுவும் ஒரு இராட்சதக் கணிப்பொறி எனலாம். ஏனெனில் இது 80 டன் எடையும் 19 ஆயிரம் வால்வுகளும் 10 இலட்சம் இணைப்புகளும் கொண்டது.



கிட்டத்தட்ட 1,500 சதுர அடி பரப்பளவை இது ஆக்கிரமித்துக் கொள்ளும். துளையிடப்பட்ட அட்டைகளே இதில் பயன் படுத்தப்பட்டன. இது வினாடிக்கு 5,000 கூட்டல்கள் போடும். அதே போல் வினாடிக்கு 300 பெருக் கல்களும் செய்யும் வல்லமை கொண்டது.

### யூனிவாக்

அமெரிக்காவிலுள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் மிகவும் உறுதுணையாக இருந்த யூனிவாக் என்ற கணிப்பொறி 1951-ஆம் ஆண்டு வடிவமைக்கப் பட்டது. அந்தக் கருவி முன்னிலும் மேம்படுத்தப்பட்டத் தொழில்நுட்பத்தைக் கொண்டது. அதிலும் துளையிட்ட அட்டை களே பயன்படுத்தப்பட்டாலும், அது தானாகவே எண்களைப் படிக்கும், கூட்டிக் கழிக்கும் திறன் கொண்டது. விடைகளை அச்சிடும் திறமையும் கொண்டது. ஒரு நொடிக்கு 250 வகுத்தல் கணக்குகளைச் செய்யும் ஆற்றலும் கொண்டது. முதன் முதலில் கணிப்பொறிச் சந்தையில் விற்கப்பட்ட கணிப்பொறியை அமெரிக்க மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பீரோ. விலைக்கு வாங்கி பயன்படுத்தியது.

1955-க்குள் இது போன்ற 15 கம்ப்யூட்டர்கள் விற்றுத் தந்தன. அதுவரை கால்குலேட்டர்களைச் செய்து வந்த ஐ.பி.எம். (I.B.M.) நிறுவனம் அவ்வகைக் கணிப் பொறிகளைத் தயாரிக்கத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முதல் கம்ப்யூட்டர் ஐ.பி.எம். 701 என்ற பெயரில் வெளிவந்தது.

வேலை செய்யும் திறனைக் கணக்கிட்டு, கணிப்பொறிகளை மூன்று வகையாகப் பகுக்கலாம். அவை மைக்ரோ கம்ப்யூட்டர், மினி கம்ப்யூட்டர் மற்றும் மெயின் ஃப்ரேம் கம்பூட்டர். நாம் கொடுக்கக் கூடிய ஆணைகளை வாங்கிக் கொண்டு அதை அலசி ஏற்கெனவே கொடுத்துள்ள தகவல்களோடு ஒப்பிட்டு, தகுந்த விடை அல்லது சரியானத் தகவலைத் தருவது கணிப்பொறி யின் பணியர்கும். மைக்ரோ கம்ப்யூட்டர், என்பது மிகச் சிறிய கைக்குள் அடங்கும் அளவுக்கு உருவம் கொண்டது இது 1971-ஆம் ஆண்டு முதல் சந்தைக்கு வந்தது. இது உருவத்தில் சிறியதாக இருந்தாலும் ஆற்றலில் மற்ற கம்ப்யூட்டர்களைவிடச் சிறப்புப் பெற்றது.

**மினி கம்ப்யூட்டர்**

இது ஒரு சிறிய பெட்டியளவே இருக்கும் இதில் வால்வு பயன் படுத்தாமல் டிராஸ்சிஸ்டர் களைப் பயன்படுத்துவதால் ஒரு சூட்கேசுக்குள் அடைத்துவிடக் கூடிய உருவம் கொண்டது 1960-களில் சந்தைக்கு வந்தது. மெயின் ஃப்ரேம் கம்ப்யூட்டர் என்பது மிகப்பெரிய உருவத்தைக் கொண்டது. இது நூற்றுக் கணக்கான டெர்மினல்களும், யூனிட்டுகளும் கொண்டது. இதன் விலை ரூ.25 இலட்சத் திலிருந்து 10 கோடி ரூபாய் அளவில் உள்ளது.

**சூப்பர் கம்ப்யூட்டர்**

கணிப்பொறிகளிலேயே மிக அதிக சக்தி வாய்ந்தது சூப்பர் கம்ப்யூட்டர் ஆகும். சக்தி என்பது கணக்கிடும் வேகம், பைனறி வார்த்தைகளின் நீளம், நினை வாற்றல் போன்றவற்றை உள்ளடக்கியது. இன்றைய உலகில் கிரே III (Cray III) என்ற கம்ப்யூட்டரே முதலாவதாகத் தயாரிக்கப்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை பரம் என்ற பெயரில் சி டாக் (C DAC) நிறுவனம் சூப்பர் கம்ப்யூட்டர் தயாரிப்பில் இறங்கியுள்ளது. இதே போல் ஜப்பானிய உலகப் புகழ் பெற்ற ஃபுஜிட்ஸு (Fujitsu) என்ற நிறுவனம் சூப்பர் கம்ப்யூட்டர் தயாரித்து வருகிறது. அணு ஆராய்ச்சி, வானிலை ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்புத் துறை ஆகியவற்றில் சூப்பர் கம்ப்யூட்டரின் பங்கு குறிப்பிடத் தக்கதாகும். கோடிக்கணக்கில் விலையுள்ள இவை உலக மெங்கும் கிட்டத்தட்ட நூறு எண்ணிக்கையில் மட்டுமே இருக்கின்றன.

கம்ப்யூட்டரின் வேகத்தை ஒரு வினாடியில் எத்தனை மில்லியன் கட்டளைகளை அது நிறை வேற்றும் என்பதைப் பொறுத்து, அதன் திறமையை, பெயரை மதிப்பிடுகிறார்கள். அதாவது மிப்ஸ் (Millions of Instructions per second) என்ற அளவுகோலால் கணக்கிடப்படுகிறது. ஒரு சாதாரண கணிப்பொறி ஒரு வினாடியில் ஒன்று அல்லது சில மில்லியன் கட்டளைகளை நிறைவேற்றும் ஆற்றல் உள்ளது என்றால் சூப்பர் கம்ப்யூட்டரோ அதே நேரத்தில் பல்லாயிரம் மில்லியன் கட்டளைகளை நிறை வேற்றக்கூடியது.

1964-இல் அமெரிக்க நாட்டி லுள்ள டர்பா (Defence Advanced Research Projects Agency) நிறுவனம் முதலாவது சூப்பர் கம்ப்யூட்டரை வடிவமைத்து இன்று கம்ப்யூட்டர் தயாரிப்பில் ஜப்பான் அமெரிக்க நாட்டிற்குக் கடும் போட்டியாக இருந்து வருகிறது.

இது ஒரு கம்ப்யூட்டர் காலம். என்றால், எல்லோரும் ஒத்துக் கொள்வார்கள். ஏனென்றால், இன்று மனித மூளையால் கண்டுபிடிக்கப்பட்ட கம்ப்யூட்டர் மனிதனையே ஆளுகின்ற ஓர் சூழ்நிலை உருவாகிவருவதை நாம் காண முடிகிறது. சான்றாக, உலக செஸ் சாம்பியனான கார்போவ் என்பவர் கம்ப்யூட்ட ருடன் செஸ் ஆடியபோது, அவருக்கு இணையாக ஒருமுறை சவாலை ஏற்றுக்கொண்ட கம்ப்யூட்டர் பின்னர் இரண்டாம் முறை தோற்றுப் போனது, அனைவருக்கும் நினைவிருக கலாம். இந்தியாவைப் பொறுத்த வரை கம்ப்யூட்டரின் ஆட்சி அனைத்துத் துறையிலும் வெகுவாகப் பரவி வருகிறது.


---

**மனிதனுக்குள்ள இழிவு சமுதாயத்திற்குள்ள இழிவாகும் சமுதாயத்திற்குள்ள இழிவு நாட்டுக்குள்ள இழிவாகும்.**

**—தந்தை பெரியார்**

---

## இண்டர்நெட் (Internet)



உலகம் ஒரு கிராமம் (Global Village) என்கிற கோட்பாடு அண்மைக் காலங்களில் உலகத் தலைவர்களால் பேசப்படுகிறது. கம்ப்யூட்டர் வளர்ச்சியைப் பார்க்கும்போது, இந்தக் கோட்பாடு செயலுக்கு வந்துவிட்டது என்றே கூறலாம். 1969-ஆம் ஆண்டு, இண்டர்நெட் என்று அழைக்கப்படும் புதிய உத்தி அமெரிக்கப் பாதுகாப்புத் துறையில் பிறந்தது. ரஷ்ய நாடு அமெரிக்க கம்ப்யூட்டர் தகவல் மையங்களை அழித்துவிடப் போகிறது என்ற ஒரு செய்தியின் அடிப்படையில்ஆர்பா (Advanced Research Project Agency) அடிப்படையில் ஒரு புதிய கம்ப்யூட்டர் இணைப்பை அறிமுகப்படுத்தியது. பின்னர் இவ்விணைப்பு, பெரும்பாலான அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் பயன்படுத்தப்பட்டது. இண்டர்நெட் இணைப்பின் மூலம் உலகிலுள்ள நாடுகளில் பலவற்றையும் இணைப்பதோடு, அவைகளுக்குள்ளே செய்தி பறிமாறவும் முடியும். அதாவது தற்போது வழக்கிலுள்ள டெலிபிரிண்டரைப் போல் செயல்பாடு கொண்டது. ஆனால், இந்த இண்டர்நெட் தயாரிப்பின் மூலம் இருவழிப் பாதையில் செய்திகளைக் கொடுக்கவும், வாங்கிக் கொள்ளவும் இயலும். இந்தத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சியே ஈமெயில் (Electronic Mail) என்றழைக்கப்படும் புதிய தொழில் நுட்பம். இது செயற்கைக்கோள் மூலம் இயக்கப்படுவதால் போர்க்காலங்களில் கூட இது இடையூறின்றிச் செயல்படும் என்று நம்பப்படுகிறது. இந்தியாவில் விதேஷ் சஞ்சார் நிகாம் லிமிடெட் அண்மையில் இந்த ஈமெயில் தொழில் நுட்பத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. இது கல்வி மற்றும் ஆராய்ச்சி துறையினருக்கு ஒரு வரப்பிரசாதமாக திகழ்கிறது. குறிப்பாக, இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரிகள் (ஐ.ஐ.டி) மற்றும் இந்திய மேலாண்மைக் கல்லூரிகள் (I.I.M.) போன்றவைகளில் இந்த வசதி தற்போது பயன்படுகிறது.

இண்டர்நெட் வசதி பல்வேறு நன்மைகளைத் தந்தாலும், இதனால் சில இடையூறுகளும் இருக்கத்தான் செய்கின்றன. ஒருசில மாதங்களுக்கு முன்னால் இண்டர்நெட் மூலம் இணைக்கப்பட்ட அமெரிக்க வெள்ளை மாளிகையில் அதிபர் கிளிண்டனுக்கு சிங்கப்பூரிலிருந்து ஒரு பள்ளி மாணவன் கொலை மிரட்டல் இந்த இண்டர்நெட் மூலம் செய்ததையும் பின்னர் அது கண்டுபிடிக்கப்பட்டதையும் அனைவரும் அறிவர். ஆக இண்டர்நெட் நன்மைகளையும் அதே நேரத்தில் தீமைகளையும் கொண்டிருக்கிறது.

### அண்மைக்காலக் கண்டுபிடிப்பு

இன்றைய கணிப்பொறியின் வளர்ச்சி முதலில் பாஸ்கல் என்பாரிடமிருந்து தொடங்கி லிபின்ட்ஸ், ஜக்கார்டு, பாபேஜ், லவ்லேஸ், ஹாலரித், ஐக்கன், மாச்லே, எக்கர்ட், நாய்மன் என்பவர்கள் மூலம் முன்னேறியது. இன்று கம்ப்யூட்டர் மானிட்டரின் முன் அமர்ந்து பேசினால் அப்பேச்சு அப்படியே திரையில் எழுத்து வடிவில் மாறக்கூடிய புதிய தொழில் நுட்பம் வளர்ந்து வருகிறது. அதற்கு SSVR (Speech Synthesis Voice Recognition) என்று பெயர். இது அமெரிக்கா மற்றும் ஜப்பான் நாடுகளில்

செயல்பாட்டில் இருக்கிறது. இது தவிர கதவின் முன் நின்று பேசினால் அந்தக் குரலைக் கண்டுபிடித்து, தானே திறக்கும் அல்லது பூட்டிக்கொள்ளும் தனித்திறன், வாகன ஓட்டுநர் மதுபானம் அருந்தியிருந்தால் அந்த வாகனம் நகராமல் அடம் பிடிக்கும் திறன், இப்படி எவ்வளவோ தனித் திறன்கள் துறைதோறும் கம்ப்யூட்டர் நிகழ்த்திக் காட்டப் போகின்றது.

இன்றைய நவீன கம்ப்யூட்டர்களில் வழக்கமாகப் பயன்படுத்தும், சிலிக்கான் சில்லுகளுக்குப் பதிலாக வேகமாகச் செயலாற்றக் கூடிய கல்லியம் ஆர்சனிக் என்ற கூட்டுப் பொருள் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இது எலக்ட்ரான்களை (சிலிக்கானைவிட) ஆறு மடங்கு வேகமாகச் சுழலச் செய்யும். இந்த வேதிப் பொருளால் ஒளியைக் கிரகிக்கவும், வெளியிடவும் செய்யும். இதன் செயல்பாட்டைப்பார்க்கும்போது இனி வருங்கால உலகம் கம்ப்யூட்டரின் காலடியில் செயல்படப்போகிறது என்று நாம் அறுதியிட்டுக் கூறமுடியும்.

கணிப்பொறிகளின் மூலம் உலகத்தில் பல விந்தைகளையும் செய்ய முடியும். பல விபரீதங்களையும் ரோபாட் போன்றவைகளால் உருவாக்க முடியும். ஆகவே, ஆக்கும் சக்தியும், அழிக்கும் சக்தியும் கம்ப்யூட்டருக்கு இருந்தாலும், அதனை இயக்கும் சக்தி மனிதனுக்கு இருப்பதால் நாளைய உலகம் மானுடத்தின் கையில் தான் இருக்கிறது என்று நாம் நம்பலாம். ஏனெனில் இது ஒரு கம்ப்யூட்டர் காலம்!

**எம்.வி.எம். அசோகன்**


# பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்

**பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பொதுப்பணித் தொழிலகம் துவக்கப்பட்ட நாள் - 1.10.1960 பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பொதுப்பணித் தொழிலகத்தில் தயாரிக்கப்படும் பொருள் விபரம் பவானிசாகர் ஊராட்சி ஒன்றியப் பஞ்சைபுளியம்பட்டி பொதுப்பணித் தொழிலகத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மிகப் பெரிய வேலைகள் பின்வருமாறு:**

1. பு. புளியம்பட்டியைச் சுற்றியுள்ள நூற்பு ஆலைகள்
2. பவானிசாகர் ஊரக விரிவாக்கப் பயிற்சி மையக் கம்ப்யூட்டர் அறை
3. மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (மகளிர்) ஈரோடு
4. இப்பகுதியில் உருவாகும் அனைத்து அரசுக் கட்டடங்களுக்கும், தனியார் கட்டடங்களுக்கும் தேவையான பொருட்கள். இந்தத் தொழிற்கூடத்திற்குத் தேவையான மூலப்பொருள்களை ஸ்டீல் அத்தாரட்டி ஆப் இந்தியா, டாடா, அரக்கோணம் ஸ்டீல்ஸ் மற்றும் சிட்கோ போன்ற அரசு நிறுவனங்களிலிருந்து நல்ல உயர்ரகமான, தரமான, நயமான பொருள்களை பெற்று விவசாய உபயோகத்திற்குத் தேவையான எல்லாவிதமான சிறிய பொருள்கள் முதற்கொண்டு புதிய வீடுகளுக்குத் தேவையான கதவு, ஜன்னல், படிகட்டு கிரில்கள், டிசைன் கிரில்கள், கல்யாண மண்டபங்களுக்குத் தேவையான டைனிங் டேபிள், சேர்கள் மற்றும் அலுவலக உபயோகத்திற்குத் தேவையான எல்லா அளவுகளிலும் பீரோ, டேபிள், சேர், ஸ்டூல், ரேக் போன்றவைகளும் திருமண மண்டபம், தியேட்டர், கடைகள் பெரியமில்கள் தறிக்கொட்டகைகளுக்குத் தேவையான ரோலிங் சட்டர்கள், காம்பவுண்டு கேட்டுகள், தகடு கதவுகள், ஜன்னல்கள், டிசைன் கிரில்கள், ஸ்டீல் டிரஸ்கள், பர்லின் தூண்கள், பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான பெஞ்சுகள், டெஸ்க்குகள், நாற்காலிகள், சாயப்பட்டறைக்கும், இரும்பு காய்ச்சும் தொழில்களுக்கும் தேவையான அனைத்துப் பொருள்களும் நகராட்சி பேரூராட்சிகளுக்குத் தேவையான சுகாதாரக் கருவிகள் அனைத்தும் மருத்துவமனைகளுக்குத் தேவையான அனைத்து பர்னிசர்களும் மற்றும் இரும்பு பெட்டிக்கடை, கால் அணிக்கடை, டயர் இரும்பு வண்டிகள் இன்னும் பலதரப்பட்ட புதிய இரும்பு மற்றும் மரம் பொருட்கள், சோக்கேஸ்கள், பழைய இரும்பு மற்றும் மரத்தளவாடங்கள் புதுப்பித்து பழுதுபார்த்துக்கொடுக்கும் பணிகளையும், குறைந்த விலையில் சிறந்த தொழில்நுட்பப் பணியாளர்களை கொண்டு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட அளவில் தயாரித்து கொடுக்கப்படும்.

இந்த அரசு தொழிற்கூடம் கடந்த 30 வருடங்களாக நல்ல முறையில் லாபகரமாக இயங்கி வருவதுடன் மாவட்டம் மற்றும் மாநில அளவில் புகழுடனும் சிறந்து விளங்குகிறது. தனியார் நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது எக்காலத்திலும் பொருளின் தரம் உயர்ந்தும், விலை குறைந்தும் இருக்கும். இந்த தொழிற்கூடம் முழுமையாக ஊராட்சி ஒன்றிய பொதுநிதி மூலம் ஆணையாளரது கண்காணிப்பின் கீழ் இயங்க வருகிறது. ஆகவே பொதுமக்கள் விவசாயிகள், அனைத்து அரசுத்துறை நிறுவனங்களும் தங்களது மேலான ஆதரவை கொடுத்து முழு ஒத்துழைப்புத்தர வேண்டுமாய் அன்புடனும் கனிவுடனும், கேட்டுக் கொள்கிறோம்.

**பணம் உங்களுடையது ! நல்ல தரம் எங்களுடையது!!** **மேலும் விபரங்களுக்கு அணுகவும்**

**S. அமிர்தலிங்கம்,** டி.சி.ஆர்.இ.
தனி அலுவலர், ஊராட்சி ஒன்றியக்குழு,
பவானிசாகர் மற்றும் கோட்ட வளர்ச்சி
அலுவலர், கோபிசெட்டிபாளையம்

**K. குருசாமி**
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்,
பவானிசாகர்.

**பெ. பீலன்,**
ஆணையாளர் மற்றும்
வட்டார வளர்ச்சி அலுவலர்
ஊராட்சி ஒன்றியம்
பவானிசாகர்

Phone: 79954

# N. J. K. SUPER TRAVELS

## HOTEL BRINDHAVAN BUILDING

**Mettur Road**

**(Near Bus Stand)**

## ERODE

பதிவு எண்: 7/59

போன் பங்க்: 211066
கிளை: 212438

# லாரி சொந்தக்காரர்கள் சங்கம்

**டீலர்: ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட்**


272, சத்தி ரோடு, ஈரோடு - 638 003

**கிளை**
41, புது பஸ் ஸ்டாண்ட் ரோடு
(E.V.K. செல்வம் கல்யாண மண்டபம் எதிரில்)
ஈரோடு - 638 003

எங்களிடம் தரமான பெட்ரோல், டீசல், மில்ஸி ஆயில், கயிறுகள், கிரீஸ், பிளாப், டியூப் பவுடர், டிஸ்டில் வாட்டர், ஆசிட் வாட்டர் ஆகியவைகள் நியாயமான விலையில் கிடைக்கும்.

மேலும் எங்களது கிளை விற்பனை நிலையத்தில் கேஸ்ட்ரால், சர்வோ பிரைட், மோட்டுல், வீடால் ஆயில்கள், மற்றும் ஆயில் பில்டர்கள், வாசர்கள், கிரீஸ் ஆகியவைகள் நியாயமான விலையில் கிடைக்கும்.

"தரமான சுத்தமான பொருள்களின் விற்பனையே எங்களது உத்திரவாதம்"



# யாவரும் விரும்பும் மூலனூர் முருங்கை

இயற்கையின் கருணையை ஏற்றபடி பயன்படுத்தினால் எதிலும் வெல்லலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது பெரியார் மாவட்டத்தின் மூலனூர் பகுதி.

மூலனூர், ஈரோட்டிலேயே வறட்சியான பகுதியாகும். ஆண்டு மழைவளம் 500 மி.மீட்டருக்கும் குறைவு. வட கிழக்குப் பருவ மழையோ அக்டோபர் நவம்பர் ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் தலை காட்டும். அதுவும் 250 மி.மீட்டருக்கும் மிகாது. ஆயக்கட்டுகள் ஏதும் இல்லாத பகுதி. அதனால் வேறு பயிர் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏதும் இல்லாத சூழ்நிலை. அதுமட்டுமின்றி மிகக் குறைவான சத்துள்ள மண். ஓடக்கல் மண்வாகு. கால்கேரியஸ் என்று சொல்லப்படும் சுண்ணாம்புச் சத்து அதிகமாக உள்ளது. மேலே கூறிய காரணங்களால், இயற்கை மூலனூர் பகுதியை வஞ்சித்தது போலத் தோன்றினாலும், உண்மை அதுவல்ல என்பதை அப்பகுதி மக்கள் நிருபித்து வருகிறார்கள். எந்த பயிர்வகையும், வளர வாய்ப்பில்லை என்று எண்ணிய இடத்தில் முருங்கை மிகவாகப் பூத்து வெகுவாகக் காய்ப்பதை அறிந்து, முருங்கையைப் பெருமளவில் சாகுபடி செய்யத் தொடங்கிவிட்டார்கள். இன்று, முருங்கை என்றாலே மூலனூர் என்று பெயர் பெறுமளவுக்கு பெரியார் மாவட்டம் புகழடைந்து இருக்கிறது என்றால் அது மிகையல்ல.

மூலனூரில் முருங்கை அறுவடை ஆண்டுக்கு இருபருவம் நடக்கிறது. ஜூன் மாதம் பூத்து ஆகஸ்டில் காய் காப்பது ஒரு பருவம். அடுத்து ஜனவரியில் பூத்து மார்ச்சில் காய்பிடித்து அறுவடைக்கு வருவது இன்னொரு பருவம்.

ஒருமுறை காய் அறுத்தால் ஒரு மரத்திற்கு 200 லிருந்து 300 காய்கள் வரை அறுக்கலாம். ஒரு பருவத்திற்கு 6 தடவை இப்படிக் முருங்கக்காய்களை அறுவடை செய்கிறார்கள். இப்படி அறுவடை செய்யப்படும் காய்களின் அளவு பருவத்திற்கு 40 இலட்சம் இருக்கும் என்று தெரிவித்தார், வேளாண்மை உதவி இயக்குநர் திரு டி.பி. இராமசாமி.

மூலனூர் முருங்கைக்காய் ஒண்ணேகால் அடியிலிருந்து ஒண்ணரை அடி நீளம் வளருகின்றது. ஜாப்னா வெரைட்டி என்று சொல்லும் நீள முருங்கையை ஒரு போதும் மூலனூர் முருங்கைக்குப் போட்டியாகக் கருத முடியாது என்று மூலனூர் முருங்கை விவசாயிகள் அடித்துக் கூறுகின்றார்கள். காரணம் மூலனூர் முருங்கையின் சுவை மற்றும் அதன் சதைப்பற்று. இதனால்தான் சென்னைக்கு தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், கர்நாடகாவின் பல பகுதிகளுக்கும் தொடர்ந்து மூலனூர் முருங்கை ஈரோட்டிலிருந்து ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கிறது!

## ஊரும் பேரும்!

**உபயோகப் பொருளை ஊர்ப் பெயரால் அறிந்து கொள்ளும் அளவுக்கு ஒன்றோடு ஒன்றிவிட்ட சிறப்பு...எடுத்துக்காட்டாக காளை என்றதும் காங்கேயம் என்பது நினைவுக்கு வருமே, அப்படி!...வேறு மாவட்டங்களைவிட பெரியார் மாவட்டத்திற்கே அதிகம் எனலாம். அந்த வகையில் ஒரு சில:**

**காங்கேயம் காளை**
**மூலனூர் முருங்கை**
**ஊத்துக்குளி வெண்ணெய்**
**ஈரோடு மஞ்சள்**
**பவானி ஜமக்காளம்**
**சித்தோடு நாட்டுச் சக்கரை**

*With Best Compliments From:*

# S.P. Periasamy & Co.,

# P and C Construction (Pvt) Ltd.,

# Engineering Contractors & Promoters

**Head Office:**

H-108, Periyar Nagar,

ERODE - 1

Phone: 220334, 220 444

**R. O.:**

188-D, Middle Block

P.H. Road,

Kilpauk,

Madras-600 010

Phone: 6412168, 6421043

## MAXWELL APPAREL INDUSTRIES LTD.,

MAXWELL

SPINNING DIVISION
KOLAPPALUR - *638 456*
GOBICHETTIPALAYAM (TK)
PERIYAR DISTRICT
PHONE: *(04285) 22890, 23548, 23549, 23530* FAX: *(04285) 22890*

**Having Latest Generation of Spinning Machinery and**

**Producing very high quality combed Cotton Hosiery Auto Coned Yarn**

**for Knitting**

**COUNT RANGE NE $30^s$-$40^s$**

**Head Office:**

MAXWELL APPAREL INDUSTRIES LTD.,

C-6, Road No *22,* M.I.D.C.,

ANDHERI (E)

BOMBAY - *400 093.*

Phone: *(022) 8324293, 8221550, 8221405*

Fax: *0091-22-8371023*

இப்புத்தகம் பகுத்தறிவு விரும்பிகளெல்லாம் படித்துப் பயன்பெறத்தக்க ஒன்று.

—ராஜு

# நூல் நயம்

## தமிழர் தாய் மருத்துவம்

ஆசிரியர் : டாக்டர் எஸ். சிதம்பரதாணுப்பிள்ளை

வெளியீடு : சித்த மருத்துவ
இலக்கிய ஆராய்ச்சி மையம்,
E-32, அண்ணாநகர் கிழக்கு
சென்னை 102

பக்கம்: 373 விலை: ரூ.200

'நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்'என்பார்கள். நோய் நொடியின்றி வாழ்வதற்கு நமது முன்னோர்கள், பல அரிய மூலிகை களைக் கண்டுபிடித்தார்கள். அதைக் கொண்டு மருந்தும் செய்து மக்களுக்கு வழங்கினார்கள். இயற்கை அன்னையின் இனிய வ்ரவாக சித்த மருத்துவம் விளங் கியது. அந்த மருத்துவத்தின் மகிமையை எடுத்துச் சொல்வதே இந்த நூல்.

அன்றாடம் நாம் பல நோய் களால் பீடிக்கப்பட்டுத் துன்புறு கின்றோம். கண்வலி, தலைவலி, காதுவலி, தொண்டை நோய், மார்பு மற்றும் வயிற்று நோய் என்று அல்லலுறுவோருக்குக் கைகண்ட மருந்தாக விளங்குவது சித்த மருத்துவ முறையேயாகும்.

உதாரணமாக, வயிற்றுக் கோளாறுக்கு என்ன மருத்துவம் செய்யலாம் என்று கூறி, மருந்து செய்முறையும் தெளிவாகக் கூறப் பட்டுள்ளது. இதேபோல, ஏராள மான நோய்களுக்கு (நூலில் ஒரு பட்டியலே இருக்கிறது). மருந்து செய்முறை கூறப்பட்டுள்ளது. எல்லாரும் படித்துத் தெரிந்து கொள்ளும் வகையில், எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சமாகும்.

—மறைமலை

## பெரியாரும் அரசியலும்

ஆசிரியர் :
டாக்டர் அ. முத்துசாமி

வெளியிட்டோர்:
வடமலையான் நிலையம்
153, என்.எஸ்.சி போஸ் ரோடு
சென்னை 600 079

பக்கம்: 128 விலை ரூ.25

இந்த நாடு நலம்பெறவும், நாட்டுமக்கள் வளம் பெறவும் தன்னை முழுமையான சமுதாயப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்டு மங்காப் புகழ் பெற்றவர் தந்தை பெரியார். நலிவுற்றுக் கிடந்த தமிழ்ச் சமுதாயம் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஏற்றம் பெற்ற தென்றால், அவருடைய அரசியல் ஈடுபாடே அதற்கு முழுமுதல் காரணமாகும். இத்தனைக்கும் அவர் பட்டம் பதவிகள் மீது மோகம் கொண்டவரல்ல. உலக அர சியல்வாதிகளெல்லாம் பின்பற்றத் தக்க முற்போக்கு எண்ணம் கொண்டவர், அந்த வெண்தாடி வேந்தர். சிறை பல கண்டபோதும் சீற்றம் தணியாத சிங்கம்போல் வாழ்ந்தார்.

இதுவரை நாம் சொன்ன இந்தக் கருத்துகளின் விளக்கம் போல அமைந்திருக்கும் ஆய்வு நூலாகும் இது. திரு கி. வீரமணி அவர்களின் அணிந்துரை, இந்நூலுக்கு மகுடம் போலத் திகழ்கிறது.

## எட்டாம் உலகத் தமிழ் மாநாடு

ஆசிரியர்: பி.எல். ராஜேந்திரன்

வெளியீடு:
பூங்கொடி பதிப்பகம்
14, சித்திரைக்குளம், மேற்கு வீதி,
மயிலாப்பூர்,
சென்னை - 600 004

பக்கம்: 154 விலை: ரூ.30

சென்ற ஆண்டு தொடக்கத் தில், தஞ்சாவூரில் எட்டாம் உலகத் தமிழ் மாநாடு நடைபெற்றது அல்லவா? அந்த ஒருவார காலமும் அங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இந்த நூல் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

தமிழ் மொழியின் சிறப்பு, இலக் கியத்தின் பெருமை, அதன் தொன்மை வளத்தை உலக அளவில் வாழும் தமிழர்கள் அறிந்து கொள்ளவும், முதலாம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் தொடங்கி, எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் நடைபெற்ற சிலைகள் திறப்பு, பிரம்மாண்டமான நுழைவு வாயில்கள், ஊர்வலச் சிறப்பு, மாநாட்டுத் தொடக்க விழா, மாநாட்டு மலர்கள் வெளியீடு, தொடக்கவிழாப் பேருரை, 'இலக் கியச் சோலை' திரைப்பட வெளி யீட்டு விழா, கலைநிகழ்ச்சிகள், தமிழாய்வு அமர்வுகள், அறிவிப்புக்ள் போன்ற நிகழ்ச்சிகள் இதில் அழகு படச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

உலகத் தமிழர்கள் அனைவரும் இந்நூலை போற்றிப் பாது காப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

—அ. மதிமாறன்

# சிந்தாமணி கூட்டுறவுச்சிறப்பங்காடி

ஈரோடு

வாடிக்கையாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும்

**சிந்தாமணி**

அன்பு வணக்கத்தினைத்தெரிவித்துக் கொள்கிறது

**சிந்தாமணி**யில்

* தாங்களே பொருட்களைத்தேர்வு செய்ய சுயசேவைப் பிரிவு
* மருந்து வகைகளுக்கு 5% கழிவு
* 100% தர ஆய்வுக்குப் பின்னர் உணவுப் பொருட்கள் விற்பனை.
* திண்டல் பகுதியில் **சிந்தாமணி** பெட்ரோல் பங்க்
* தலைமை அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆயில் பிரிவு
* திருமணம் மற்றும் இதர விசேஷசங்களுக்கு மளிகைப்பொருட்கள் இலவச டெலிவரி

## கிளைகள்

* ஈரோடு கடைவீதி கிளை
* ஈரோடு பேருந்து நிலைய கிளை
* ஈரோடு கொல்லம்பாளையம்
* ஈரோடு தூரம்பட்டி மகளிர் கிளை
* ஈரோடு சம்பத் நகர்
* ஈரோடு தினசரி மார்க்கட் கிளை
* பவானி, கோபி, சத்தி, காங்கயம், தாராபுரம்

இருகரம் கூப்பி அழைக்கிறது **சிந்தாமணி**

**இரா. நல்லதம்பி**

எம்.ஏ., எம்.பி.ஏ., எச்.டி.சி.

இப/தனி அலுவலர்



ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927




தூய
பட்டு
தூய
சரிகை





ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

HTA.75

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23









